பொன் மழை!

# பொன் மழை!

## 1

*'நான் ஒளித்து வைத்ததை யாரும் கண்டறியார்!*
*நான் புதைத்து வைத்ததை யாரும் கொண்டு செல்லார்!'*

*- தனி வல்லக் கோட்டை ஜமீன்தாரின் டயரியிலிருந்து...*

தொலைவில் தெரிகின்றது முனியன் குன்று-

தொலைவென்றால் பத்துப் பதினைந்து மைல் தொலைவில்!

இந்தப் பக்கமும் அந்த பக்கமுமாய் பச்சைக் கூமாச்சி மலையின் நீண்ட வரிசை.

அரக்கி முலைபோல கூம்பு கூம்பாய்... ஆனால் அடர்ந்த வனப் பச்சையோடு கூமாச்சி மலை கிடக்க, நடுவில் கொஞ்சம் சாம்பல் தட்டிப்போய் அவ்வளவாய் பசுமையின்றித் தெரிகிறது முனியன் குன்று.

"அதான் முனியன் குன்றுங்களா?" - கேட்டபடி சோம்பல் முறிக்கிறான் இளங்கோவன்.

"ஆமா... தம்பி யாரு வெளியூரா?"

"ஆமாங்க..."

"எந்த ஊரு?"

"எனக்கு திண்டுக்கல்."

"திண்டுக்கல்லுங்கறீங்க, முனியன் குன்றப் பத்தி தெரியாத மாதிரி கேக்கிறீங்களே..."

"திண்டுக்கல்லா இருந்தாலும் படிச்சு வளர்ந்தது எல்லாம் மெட்ராஸ்ல. அதான்."

"பாத்து தம்பி... விஷயம் தெரியாம தேன் எடுக்க கடுக்கா பொறுக்கன்னு மலைப்பக்கம் போய் வைக்காதீங்க. அப்பால உசுருக்கு உத்தரவாதமில்ல..."

- இப்படிச் சொல்பவர் ஒரு அறுபது வயது பெரியவர். நாலுமுழ வேட்டியும் துண்டுமாக, பொன் விளைந்த பட்டி என்னும் கிராமத்தின் விவசாயி.

- யாரைக் கேட்டாலும் இப்படித்தான் பயமுறுத்துகிறார்கள். முனியன் குன்று என்றால் முழிபிதுங்கிப் போகிறது. பயம் தொடை பற்றுகிறது. உடம்பு நடுங்கத் தொடங்கி விடுகிறது.

இளங்கோவன் அந்த பெரியவர் சொன்னதை அசை போட்டபடியே நடையைத் தொடருகிறான். செம்மண் சாலை, வேலிக் கருவேலங்காட்டுக்கு நடுவில் வண்டி ஓடிய சக்கரத் தடயங்களோடு வளைந்தும் நெளிந்தும் கிடக்கிறது.

அதன்மேல் நடக்கிறான். தோளில் பிக்னிக் ஹோல்டான் பேக்.

கழுத்தில் யாஷிகா ஜூம்லென்ஸ் கேமரா, ப்ளூ ஜீன்ஸ் பேண்ட், ஸ்டோன் வாஷ் சர்ட் பின்பாக்கெட்டில்



எட்டிப்பார்க்கும் தட்டை யானைத் தந்த சிப்பு ஒன்று, கோல்ட் ஃப்ளேக் சிகரெட் பாக்கெட் ஒன்று-

ஒரு சிகரெட்டை உருவி எடுத்து தீ வைக்கிறான், புகை சக்குகிறான். நடை தொடரும்போது எதிரில் ஒரு ஆடுமேய்க்கும் சிறுவன் - அநியாயத்துக்கு ஒரு உலக அதிசயக் காட்சி போல இளங்கோவனைப் பார்க்கிறான்.

"ஏய்... இங்க வா, எதுக்கு அப்படி பாக்கறே?"

"பாக்காம... முனியன் காட்டு பக்கம் போறீகளா..."

"ஆமா, உனக்கு எப்படி தெரியும்...?"

"இப்படி கேமரா தோள்ள வைத்து யார் வந்தாலும் அங்கதான் போவாங்க. அதான் கேட்டேன்."

"ஓஹோ... என்னைப் போல நிறைய பேர் வந்துருப்பாங்களா?"

"ஆமா..."

"சரி... நீ என் கூட வர்றியா, வழிகாட்டறியா?"

"அடி ஆத்தி... அதுக்கு வேற ஆளைப் பாருங்க..."

"எதுக்கு இப்படி பயப்பட்றே?"

"பயப்படாம... நான் உசுரோட இருக்கறது உங்களுக்கு பிடிக்கலையா?"

"நீங்க பயப்பட்ற அளவுக்கு அங்க என்ன இருக்கு?"

"என்ன இருக்கா... அது முனீசுவரசாமி மலை அந்த மலைக்கு பூசாரி கொண்டயன் மட்டும்தான் போகலாம். வரலாம். வேற யார் போனாலும் வந்தாலும் அவ்வளவுதான். முனீசுவரர் அவங்களை கொன்னுடுவாரு..."

"சரி.. இப்ப கொன்னையன் பூசாரி எங்க இருக்காரு?"

"வூட்ல இருப்பாரு.."

"அவர் வூட்டையாச்சும் காட்டுறியா?"

- அவன் சிகரெட்டை ஏக்கமாய் பார்த்தபடி அரை மனதாக தலையசைக்க, இளங்கோ ஒரு முழு சிகரெட்டை அவன் எதிரில் நீட்ட.. அவன் முகம் மத்தாப்பாகிறது.

அடுத்த நொடி அவன் உதடு ரயில் எஞ்ஜினின் கரிக்குழாய் போல புகை கக்கத் தொடங்குகிறது.

பூசாரி வீடு ஒரு சின்னக் குடிசைதான். ஆனாலும் பார்க்க மனதை கவருகிறது. குடிசை முன்னால் ஒரு அகத்தி மரம், அதன் கீழ் வெள்ளாடுகள் இரண்டு. குடிசையை சுற்றி மூங்கில் பிரம்பை அடைத்து கட்டிய வேலி. வேலிமேல் எல்லாம் சுரைக் கொடி.

"பூசாரி.. பூசாரி.." - இடையன் வெளியே இருந்து குரல் கொடுக்க உள்ளிருந்து எட்டிப்பார்க்கிறாள் ஒரு பெண்! பார்க்க பளிச்சென்று சிம்ரன், நக்மா போல இருக்கிறாள். அத்தனை வெளுப்பு - தலைமுடியிலும் தேர்ந்த மினுமினுப்பு. இளங்கோ ஒரு நொடி ஆடிப்போகிறான்.

அவள் உடனே உள்ளே திரும்பி மறைந்து போகிறாள்.

சில நொடிகள் செல்ல, உள்ளிருந்து ஒரு முரண்டு உருவம் வெளிப்படுகிறது. சடை பிடித்த தலைமுடி. ரத்தச் சிவப்பு கண்கள். நெற்றி கொள்ளாத விபூதிப் பட்டை - அதில் குங்குமப் பொட்டு.



"யாரது கூப்பிட்டது.."

"நான்தான் பூசாரி, செங்கான் மகன் சின்னான்."

"என்னாடா.. என்னா விசயம்?"

"இந்த தொரை உன்னை பாக்கணும்னார். அதான்.. சாரு- இவருதான் கொன்னையன் பூசாரி. பாத்துக்குங்க, நான் வரேன்" - அவன் அவருக்கு அவனையும் அவனுக்கு அவரையும் ஒரு தினுசாக அறிமுகப்படுத்தி விட்டு திரும்ப, பூசாரி பார்வை இளங்கோ மேல் திரும்புகிறது.

"யார் நீங்க.. என்ன விசயம்?"

"நான் திண்டுக்கல்ல இருந்து வரேன். முனியன் காட்டுக்கு போகணும்."

"காட்டுக்கா... ஏன் நல்லா இருக்கறது பிடிக்கலையா?"

"எல்லாரும் அப்படியே சொன்னா எப்படிங்க. அந்த மலைல இருக்கற புளியமரத்தடி முனி எங்க குல தெய்வம். அதைக் கும்பிட்டாதான் குடும்பத்துக்கு நல்லதுன்னு எங்க ஜோசியர் சொல்லிட்டார். அதான் வந்தேன்."

"ஏன் அந்த ஜோசியர் வேற விஷயங்களை சொல்லலையா?"

"என்ன வேற விஷயம்?"

"கடந்த ஏழு வருஷமா முனி யாரையும் மலை ஏறக் கூடாதுன்னு சொல்லிடுச்சு. நானே ராத்திரியில போய் ஒருவேளை பூசை செய்து, விளக்கு போட்டுட்டு வர்றதோட சரி."

"ஆச்சரியமா இருக்கே.. எதனால முனி அப்படி சொன்னிச்சு."

"இதை என்கிட்ட கேட்டா நான் என்னத்த சொல்ல.. போய் அந்த முனிகிட்ட கேளு.."

"நல்லதுங்க.." - இளங்கோ உடனே அலுப்புடன் திரும்புகிறான்.

"இப்ப எங்கப்போறே..?" பூசாரி கருத்து கேட்கிறார்.

"முனியன் குன்றுக்குதான்."

"இப்பதானே சொன்னேன் யாரையும் முனி மலை ஏறக்கூடாதுன்னு சொன்னிச்சின்னு.."

"நீங்கதானே சொன்னீங்க முனிகிட்டையே என்னு கேளுங்கன்னு.."

"என்னப்பா விதாண்டாவாதம் பண்றியா.. வந்த வழியே திரும்பிப்போ. வீணா குன்றுப்பக்கம் போய் அழிஞ்சு போகாதே.."

இளங்கோ நின்று பூசாரியை ஒரு ஆழமான பார்வை பார்க்கிறான்

பின் எதுவும் பேசாமல் நடக்கிறான். சில அடி நடந்திருப்பான். திரும்பிப் பார்க்கிறான். பூசாரி அருகில் இப்பொழுது அந்த அழகியபெண்!

எருமை மாட்டுக்கு பக்கத்தில் மான் வந்து நின்றது போல! அவன் திரும்பி அவளைப் பார்க்கவும் அவள் திரும்ப மின்னலைப்போல மறைகிறாள்.



# 2

'என் வம்சம் ஒரு குடிகார வம்சம்...
என் வம்சம் ஒரு கூத்திக்கள்ள வம்சம்...
இதற்கு ஆஸ்தி பாஸ்தியே கூடாது.
இருந்தால் அவ்வளவுதான் - ஏழைகள் அழிந்து
விடுவார்கள்...

- ஜமீன்தாரின் டயரியில் இருந்து-

மணிமாலை பத்திரிகை அலுவலகம் தொலைபேசி சுமருகிறது.

எடுப்பவர் ஆசிரியர் கைலாசப் பிரகாஷ்.

"யெஸ்.. கைலாசப் பிரகாஷ் ஸ்பீக்கிங்."

"சார். நான் ரிப்போர்டர் இளங்கோ பேசறேன்."

"சொல்லு இளங்கோ. குன்று பக்கம் போனியா?"

"இல்ல சார். இன்னிக்கு ராத்திரிதான் போகலாம்னு.."

"ஒன்னும் பயமில்லையே..?"

"பயமா... எனக்கா? என்ன சார்... சுடுகாட்டுல காவலுக்காக பிணத்துப் பக்கம் படுத்துருந்து எழுந்திருச்சவன் இந்த இளங்கோவன்."

"தெரிஞ்சுதானே இந்த விஷயத்துக்கு உன்னை அனுப்பியிருக்கேன். இருந்தாலும் எதுக்கும் எச்சரிக்கையா இருக்கணும்."

"நான் பாத்துக்கறேன் சார். ஆனா ஒருவிஷயம். முனியன் காடுன்னா ஆடுமாடு கூட கொஞ்சம் அரண்டு

போகுது. அவ்வளவு பயப்படறாங்க. கொண்டையன் பூசாரியைப் பார்த்தேன். அந்த ஆள் எல்லாருக்கும் மேலே பயமுறுத்திட்டான்."

"ஏன் பயப்பட்றாங்க. எதனாலன்னு எனக்கு காரணம் தெளிவா தெரியணும். முனுசாமி காட்டு மேல யாரையும் வரவேண்டாம்னு சொல்லிட்டார்னு சொல்றதெல்லாம் கப்சா."

"தெரியும் சார்.. நீங்க கவலைப் படாதீங்க. இன்னிக்கு ராத்திரி போய் என்னன்னு பார்த்துட்டு வந்துட்றேன்."

"பார்த்து இளங்கோ... புத்திசாலித்தனமா நடந்துக்கோ. சமூக விரோதிகள் தங்கள் தப்புக்காக அந்த இடத்தை தேர்ந்து எடுத்து பொது ஜனங்க வராதபடி இருக்க இப்படி முனிசாமி மேல பழி போட்டுக்கலாம். சாமியையே தங்களுக்கு சாதகமா பயன்படுத்திக்க நினைச்சவங்களுக்கு நான் நீயெல்லாம் சுண்டாக்காய்.

அதனாலதான் கலாமஞ்சரி ரிப்போர்ட்டர் துரை மாணிக்கத்துல இருந்து, போலீஸ்காரங்க பலர் வரை அங்க போய் செத்துப் போயிருக்காங்க. எல்லாத்தையும் ஞாபகம்

"கவலையே படாதீங்க சார்.. நான் பாத்துக்கறேன். டொடக்."

- இளங்கோ தொடர்பை முடக்குகிறான்!

**பொ**ன் விளைந்த பட்டி.

மாலைப் பொழுதின் பிடியில் ஆடுமாடுகள் பட்டிக்கு திரும்பும் ஜரூரில் இருக்கிறது. நிறைய கொடுக்காப்புளி மரங்கள். அதில் கிளிக் கூட்டம். ஊரைச்



சுற்றியும் பொசிந்த வயல்காடு. பசுமையான கிராமம் தான். ஊர் வடக்கில் கூமாச்சி மலை அருவி சாமநிதி ஆறாக ஓடும் ஆற்றுப்பாதை. அதிலெல்லாம் துள்ளும் வாளை மீன் கூட்டம்.

இடுப்புத் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது.

இறங்கிக் குளித்துக் கொண்டிருக்கிறான் இளங்கோ.

கரைமேல் அந்த ஹோல்டான் பேக். நன்றாக சோப்பு போட்டு நுரை ததும்பி வழிய குளிக்கிறான்.

- உற்சாகமாக இருக்கிறது.

- முங்குபோட்டு தண்ணிக்கடியில் மூச்சு கட்டி கரணமடித்து முடிந்த வித்தைகளை எல்லாம் செய்து பார்க்கிறான். சென்னையில் குறுகலான பாத்ரூமுக்குள் ஒரு பக்கெட் தண்ணிக்குள் குளித்த கொடுமைக்கெல்லாம் பரிகாரம் தேடுகிற மாதிரி குளித்துக் கொண்டிருக்கிறான்.

பரவாயில்லை.

இந்த மண்ணில் இன்னும் ஆறுகள் திருடப் படவில்லை.

அது தரும் ஆனந்தம் திருடப்படவில்லை. ஒரு பத்திரிகையாளனாக பலமாதிரி நினைத்துக் கொண்டு தண்ணீருக்கடியில் மூழ்குகிறான். தரையோடு தரையாக உட்கார்ந்து சங்கு சிப்பி தேடுகிறான்.

கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு மேலே வந்தபோது ஒரு பளீர் மின்னல்.

மதியம்போல் பூசாரி வீட்டில் பார்த்த அதே பெண்.

இளங்கோவன் இருப்பது தெரியாததால் வந்து விட்டாளோ?

திடுக்கிட்டுப் போகிறாள் அவளும்.

கையில் சோப்புப்பெட்டி, தேங்காய்ப் பூ டவல், ஷாம்பு பாட்டில் எல்லாம் தெரிகிறது.

நிச்சயமாக இவள் கிராமத்துப் பெண்ணல்ல.

தீர்மானத்தோடு அவளை நீர் வடியும் முகம் கொண்டு பார்க்கிறான் இளங்கோவன்.

அவள் உடனே திரும்பி நடக்கத் தொடங்குகிறாள்.

"ஏய் நில்லு.. எங்க ஓட்றே?"

- அவள் நிற்காமல் ஓடுகிறாள்.

"இப்ப நிக்கறியா.. இல்லை நான் ஓடி வந்து பிடிக்கட்டுமா?"

- அங்கே அவள் நிற்கிறாள்.

தண்ணீரை விட்டு விலகி இளங்கோ அவளை நோக்கி நடக்கிறான். இடுப்பில் ஸ்போர்ட்ஸில் உபயோகிக்கும் சாட்ஸ். நடையில் நல்ல கம்பீரம். அவளை நெருங்குகிறான். அவளிடம் எதன் காரணமாகவோ நடுக்கம்.

"யார் நீ?"

"______"

"கேக்கறேன்ல.. உன்பேர் என்ன?"

"செ.. செ.. செவ்வந்தி."

"இந்த ஊரா நீ..?"

"ஆ.. ஆமா.."

"பொய்!"



"இ - இல்ல.. இந்த ஊர்தான்!"

"அப்படியா.. சரி.. எதுக்கு ஓட்றே.. நீ பாட்டும் ஒரு பக்கம் ஆத்துல குளிக்க வேண்டியதுதானே?"

"அது.. அது.. வெக்கமா இருந்துச்சு.. அதான்!"

"நான் வேணா போயிட்றேன். குளி."

"தேங்க்ஸ்."

"தேங்க்ஸா.. பரவால்லியே, கிராமத்து பொண்ணு இங்கிலீஷ்லாம் பேசறியே.."

"அது.. அது.."

"சரி சரி, போய்க்குளி.." அவன் அவளுக்கு வழி விட்டபடி பேக்கை தூக்கிக்கொண்டு நடக்கத் தொடங்குகிறான். அவள் தடுமாறுகிறாள்.

"வந்து.. பரவால்ல.." - என்று எதையோ சொல்ல வந்து பின் தயங்கியபடி கேட்கிறாள்.

"நீங்க யாரு?"

"நானா... அதான் மதியானமா சொன்னேனே, திண்டுக்கல் என் ஊர். இளங்கோவன் என் பேர்னு.."

"பொய்.."

- அவளும் மடக்குகிறாள்.

"பொய்யா.. சரி வெச்சுக்க."

"இப்படிச் சொன்னா எப்படி?"

"வேற எப்படிச் சொல்லணும்?"

"நிஜத்த சொல்லுங்க. கரட்டை நோட்டம் போட வந்த சி. ஐ. டி.. போலீஸ்தானே நீங்க."

“சி.ஐ.டி போலீஸா - நானா?” - இளங்கோ கேட்டு விட்டு பகபகவென்று சிரிக்கிறான்.

“நல்லவேடிக்கை. என்னை பத்தி இப்படியெல்லாம் கூட நினைக்க முடியுதா?”

“அப்ப நீங்க..”

“நான் இளங்கோவன், திண்டுக்கல் சொந்த ஊர்..”

“திரும்பத் திரும்ப அதே பல்லவி. உண்மையைச் சொல்லுங்க, உங்க நன்மைக்காகத்தான் கேக்கறேன்.”

“என் நன்மைக்காகவா... பலே! அதுசரி, நீ ஏன் இவ்வளவு அக்கறை எடுத்துக்கறே - நான் யாரா இருந்தா என்ன?”

“அதுக்கில்ல - அந்த காட்டுப்பக்கம் போய் நீங்க செத்துடக் கூடாது பாருங்க. அதுக்காக கேக்கறேன்.”

“அப்ப நான் போனா செத்துடுவேனா. தீர்மானமே பண்ணிட்டிங்களா?”

“அதுல என்ன சந்தேகம். அந்த காட்டு முனி சக்தி வாய்ந்த சாமி. அது ஆண்டியானாலும் சரி, அரசனானாலும் சரி, விடாது.”

“அப்படியா?”

“நான் அதைச் சொல்லலை.”

“நானும் அப்படி நினைக்கலை.”

“சரி போய் அனுபவிச்சு தெரிஞ்சுக்குங்க.”

“சந்தோஷம். ஆமா டெய்லி நதிக் குளியல்தானா உனக்கு?”



- அவள் அவனுடைய அந்தக் குறும்பான கேள்வியை ரசிக்கிறாள். மெலியச் சிரிக்கிறாள். அது ஆமாம் என்பது போல இருக்கிறது.

“நாளைக்கு காட்டுக்குப் போய்ட்டு வந்த நிலையில் சந்திக்கிறேன். என்ன?”

- அவன் சவால் விடும் தொனியில் பேசி நடக்கிறான். அவளிடம் வியப்புக் குவியல்.

# 3

**‘முனியா... எல்லாவற்றையும் நீதான் காப்பாற்ற வேண்டும். எதையும் எவரும் எடுக்க இடம் கொடுத்து விடாதே! உன்னை நம்பித்தான் என் உயிர் பிரிகிறதுங்**

—ஜமீன்தாரின் டயரியில் இருந்து

இருட்டிவிட்டது. சிள் வண்டுக் கூட்டம் ரகளை பண்ணுகிறது. காதைத் திருகும் சப்தம். காற்றிலும் கூமாச்சி மலையின் பனி ஈரம். பொன் விளைந்த பட்டியில் அவ்வளவாக மின் விளக்குகள் இல்லை. அங்கங்கே லாந்தர் வெளிச்சம்தான்.

ஊர்க்காவல்காரன் மத்தளத்தான் பாட்டுப்பாடிக் கொண்டு வலம் வர ஆரம்பித்து விட்டான்.

**‘மேகம் கறுத்து மின்னல் முறுக்க**
**தாகம் எடுத்த வயில் வானம் பாத்து சிரிக்க**
**மோகம் கொண்ட பொன்னாட்டம் - மழை**
**மண்ணு தேகம் தழுவ கொட்டட்டுமே... அது!’**

அவளிடம் பாட்டு பிய்க்கிறது.

- ஊடே 'டண் டண் டண்' என்று வெண்கல சிகண்டி சப்தம். பூசாரிதான் சப்தமிட்டபடி நடந்து கொண்டிருக்கிறார். ஒரு கையில் சகிண்டி. மறு கையில் சங்கு. அதால் நடுநடுவே ஒரு ஊது ஊதுகிறார். அவரது நடை தொடர, அங்கங்கே வீட்டுக்குள்ளிருந்து சிலர் வந்து காலில் விழ அவர் கால்கள் எதிரில் உள்ள முனியின் காடு நோக்கி நடக்கிறது.

பூம்- பூம்- பூம்! சகிண்டி சப்தம்

டண்- டண்- டண்-! சகிண்டி சப்தம்.

"சாமி மலை ஏற கிளம்பிட்டியா?"

"ஆமா பெரியசாமி, சாம பலி பூசை இருக்கில்ல."

"இன்னிக்கு முறை யாரோடது?"

"நம்ம பொட்டிக்கடை ஆறுமுகத்தோடது."

"நல்லது சாமி.. போய் வா! போய்வா!

- பூசாரிக்கு வழி அனுப்புகிறார் ஒருவர். கூடவே ஒரு வெள்ளாடு ஒன்று அவரை பின்தொடர்ந்தபடி செல்கிறது.

பார்ப்பவர்கள் கன்னத்தில் போட்டுக் கொள்கின்றனர். சிலர் தங்கள் கைக்குழந்தைகளை பூசாரி காலடியில் விட்டு எடுத்துக் கொள்கின்றனர்.

ஊர் எல்லை வரையில்தான் இந்த சம்பிரதாயங்கள். எல்லைக்குப் பிறகு ஒருவர் கூட பின்தொடரவில்லை. பூசாரி மட்டும் நடையைத் தொடருகிறார். கருவேலங்காட்டு மண் பாதை - மரக்கிளைகளில் செங்குரங்குக் கூட்டம் டாண் டாண் என்று சகிண்டி அடித்தபடி வரும் பூசாரியைப் பார்த்துவிட்டு கிளைகளில் தாவிப் பிரிந்து ஓடுகின்றன.



பூசாரி எதையும் கவனிக்காமல் கடிவாளக் குதிரை போல நேரே பார்த்தபடி நடக்கிறார்.

எதிரே முனியன் குன்று!

குன்று உச்சியில் ஒரு புளிய மரம், அதிசய மரம். சாதாரணமாக புளிய மரம் பனியும் காற்றுமான மலைகளில் தழைக்காது. ஆனால் இது அப்படி இல்லை. அதிசயமாய் தழைத்திருக்கிறது. அதுவும் ராட்சசமாக தழைத்திருக்கிறது.

மரத்துக்கு கீழே ஒரு கோயில். சின்ன கோவில்தான். ஆனாலும் நல்ல கம்பீரம். உள்ளே முட்டை முழியோடு முனிசாமி. கையில் நிஜமான வாள்!

'முனிக்கு எதிரே கல்லால் செதுக்கப்பட்ட குதிரை வாகனம். அந்தக் குதிரை வாகனத்துக்கும் முன்னால் பலி பீடம். அதன்மேல் முதல் நாள் வெட்டப்பட்ட ஆட்டின் ரத்தம். ஆனால் வெட்டப்பட்ட ஆடோ அதன் அங்கங்களோடு ஒரு சிறு துண்டு கூட எங்கும் இல்லை.

டாண்- டாண்- டாண்-

சப்தம் அந்த பிராந்தியத்தில் இப்பொழுத கேட்கத் தொடங்குகிறது. பூசாரி வந்து கொண்டிருக்கிறார். பூம்- பூம் என்று சங்கு சப்தமும் நுழைகிறது.

நல்ல இருட்டு-

அதில் துளியும் தடுமாற்றமின்றி பூசாரி நடந்து வந்து பலி பீடம் முன் நின்று கை கூப்புகிறார். இடுப்பில் கை வைத்து வேட்டி மடிப்பில் இருந்து தீப்பெட்டியை எடுத்து உரசுகிறார்.

சின்ன தீத்துண்டம் புளிய மரத்தடி இருட்டை சுமாராக விரட்டுகிறது. பூசாரியின் கால்கள் தானாக

நடந்து புளிய மரத்துப் பொந்து ஒன்றுக்குள் கைவிட, அகப்படுகிறது தீப்பந்தம். எடுத்து அதில் தீயிடுபவர் பளீரிடுகிறார்.

தீ திபுதிபுவென பந்தத்தில் பற்றி எரிகிறது. நேராக தெரிகிறார் முனியப்ப சாமி. சரியான முட்டை முழிச் சாமி.

"சாமி முனீஸ்வரா!" பந்தத்தை பக்கவாட்டில் வைத்து விட்டு கை கூப்புகிறார். பின் நெருங்கி நடந்து சன்னதியில் உள்ள எண்ணை விளக்கை ஏற்றுகிறார். திரும்பவும் ஒரு கும்பிடு. கோயிலைச் சுற்றி ஒருநடை, அந்த வெள்ளாடு என்னை வெட்டு என்கிற மாதிரி எதிரில் பலி பீடம் அருகே கச்சிதமாகக் காத்து நிற்கிறது. பூசாரி இப்பொழுது முனிசாமி அருகே சென்று அதன் கரத்து அரிவாளைப் பற்றி எடுக்கிறான். ஆட்டை நெருங்கி வந்து அதன் கழுத்தருகே அதை வைத்து ஒரு கும்பிடு. பின் ஒரே போடு! தலை வேறு, உடலை வேறாக அந்த ஆடு இரு துண்டாகிறது. ஒழுகி ஓடும் ரத்தத்தில் கை வைத்து ஒரு பொட்டுத்துளி தொட்டு நெற்றியில் தீட்டிக் கொள்கிறார்.

"முனீஸ்வரா!" - என்று கண்கள் கடுங்க ஒரு குரல். திரும்பி நடக்கத் தொடங்குகிறார்.

சன்னதி வெளிச்சம் மட்டும் - தீப்பந்தமும் ஒரு பக்கத்தில் அணையாதபடி எரிந்து கொண்டிருக்க, பூசாரி வந்தது போலவே சகிண்டி சப்தமும், சங்கு சப்தமுமாய் திரும்புவதைப் பார்த்தபடி புளிய மரக்கிளை மேல் இருந்து பொத்தென்று கீழே குதிக்கிறான் இளங் கோவன்!



ஆடு இன்னமும் துடித்துக் கொண்டிருக்கிறது. முனி பார்த்துக் கொண்டிருக்கிறது, பயங்கரமாக ஏதோ நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்து ஒளிந்து கொண்டதற்கு இதுதானா பலன்?

பூசாரியிடம் நிஜமாலுமே பக்தி சிரத்தை. சந்தேகப் பட்டது தப்போ? அவனுக்குள் பலவிதமாக எண்ணங்கள் ஓட, அந்த தீப்பந்தத்தை எடுத்துக்கொண்டு கோவிலைச் சுற்றி வர ஆரம்பிக்கிறான். சின்ன கோயிலைச் சுற்றி எத்தனை முறைதான் வருவது?

பார்வையில் கூர்மையான தேடல். முகத்தில் இனம் புரியாத பயம், எதிர்பார்ப்பு. திரும்பவும் அந்தக் கோயிலை ஒருமுறை சுற்றிவரத் தொடங்கு கிறான். அங்குல அங்குலமாகப் பார்க்கிறான். அதிசயம். இந்த முறை அவன் சுற்றி வந்து முன் நிற்க அதுவரை அங்கே துடித்துக் கொண்டிருந்த ஆட்டு உடம்பைக் காணவில்லை.

பகீர் என்கிறது. பலமாய் ஒரு சிரிப்பு சப்தம் சன்ன திக்குள் இருந்து கேட்கிறது. பார்வை தைரியத்தை வர வழைத்துக் கொண்டு உட்புறம் பார்க்கிறது. முனி சாமியின் வாயில் ரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கிறது. அச்சம் வீசை ஒரு அணா என்று விலை வைத்து விட்டவன் இளங்கோவன். அவனையே அந்தக் காட்சி என்னவோ செய்கிறது. திடும்மென்று குதிரைக் குளம்படி சப்தம் வேறு காதைக் குடைகிறது.

ஐய்யோ...!

பயந்து திரும்புபவன் எதிரில் புளியமரத்தை ஒட்டி குதிரை தெரிகிறது. அது அவன் முன் திடும்மென்று தன் இரு கால்களை உயர்த்திக் கனைக்கிறது. இளங்கோவன்

ஒரு விளாடி செயலிழந்து போகிறான். திரும்பவும் நிசப்த சப்தம்.

"நேரா... நேரா" - கத்திக்கொண்டே ஓடத் தொடங்கு கிறான். காலை நன்றாகவே இடறி விடுகிறது. புனித யாத்திரை போர்த்தன்றி.

பொறுத்தம் என்று முகம் புதைய கீழே விழுபவனை மயக்கம் வந்து கவ்விப் பிடிக்கிறது.

நெடிய இரவுப்பொழுது கழிந்து பகலின் துவக்கம். புனித யாத்திரும் பறவைகளின் கூப்பாடு சப்தம் கேட்டு மயங்கிக் கிடக்கும் இளங்கோவனின் கண்கள் மெல்லத் திறக்கின்றன.

இமை மேல் ஏதோ ஒன்று இருப்பது போல தெரியவர கைகள் அதைத் தொட்டுப் பார்க்கின்றன.

இரண்டு இமை மேலும் இரண்டு தங்கக் காசுகள்!

எப்படி...

எப்படி வந்தது இந்தக் காசுகள்...?

புரியாத புதிராக அவைகளை பார்த்தபடி சுற்றிச் சுற்றி பார்க்கிறான்.

புலர்ந்தும் புலராத காலைப்பொழுது-

காய்ந்த துளியும் ரத்தமில்லாத பலிபீடம். எதிரில் அணையாத அந்த உள் சன்னதி விளக்கு! எழுந்து கையில் நாணயமுடன் நடக்கிறான். யாத்திரின் கிளை ஒன்றில் அவன் கொண்டு வந்திருந்த கேமிரா தொங்கிக் கொண் டிருக்கிறது. தோளுடன் பெக்கும் ஏறி அதை எடுத்து இறங்குகிறான். குழப்பத்தோடு திரும்ப சன்னதி முன் வருகிறான். சன்னதிச் சுவரில் ஏதோ எழுதியிருப்பது



தெரிகிறது. என்னையும் குங்குமமும் கலந்து எழுதப் பட்ட எழுத்துக்கள்.

நெருங்கிச் சென்று பார்க்கிறான். படிக்கிறான்.

"பக்திமானவனே... சந்தேகிக்காதே! நான் இருப்பது சத்தியம். எனக்கு தேவை ஏகாந்தம். உன்னை விட்டு விடுகிறேன். தங்க நாணயம் உனக்கு நான் தரும் பரிசு. சென்று விடு. எல்லையில் இருந்தே இனி கும்பிடு-

கானா முனி!"

படித்த மாத்திரத்தில் திடுக்கிட்டுப் போகிறான். இதெல்லாம் எந்த அளவு உண்மை. அவன் தலை குழப்பத்தால் கொத்தப்படுகிறது.

உசுப்பியபடி வெளியே வருகிறான். நடக்க ஆரம் பிக்கிறான். திரும்பவும் அதே மண் பாதை. கருவேலங் காடு- செங்குரங்குகள் எல்லாம் அதிசயமாக அவனைப் பார்க்கின்றன.

பொன் விளைந்த பட்டியின் எல்லை வருகிறது. கால் வைத்து ஊருக்குள் நுழைபவனை முதல்நாள் பார்த்த அந்த ஆட்டிடையன் அதிசயமாகப் பார்க் கிறான்.

"முனியின் காட்டுக்கா போயிட்டு வரீங்க!" - கேட் கிறான்.

அவன் தலை அசைகிறது.

"நிஜமாவா?"

"நம்பிக்கை இல்லாட்டி போ."

"சத்யமா நம்ப முடியலை. என்னா அந்த மலைய இருந்து உசுரோட வந்திருக்கற ஒரே ஆள் நீங்கதான்."

- அவன் பதில் அவனுக்கே மூர்ச்சை தட்ட செய்கிறது.

# 4

**'பர்மாவில் இருந்து கப்பல் மூலம் வந்து சேர்ந்தாள் கனகவல்லி. சும்மா வரவில்லை. சுமக்க மாட்டாத அளவு தங்கக்கட்டிகளோடு தான் வந்தாள். அவ்வளவையும் ஆசாரியை வைத்து காசாக்கினேன். மொத்தமாய் முப்பத்தி ஐந்தாயிரத்துக்கு கொஞ்சம் கூடுதலாக அது வந்தது.'**

- ஜமீன்தாரின் டயரியிலிருந்து

பெட்டிக்கடைச் சிகரெட்டுக்காக இருபது ரூபாய் தாளை நீட்டுகிறான் இளங்கோவன். கடைக்காரனும் சிகரெட்டை தருகிறான். ஆனால் காசு வாங்கிக்கொள்ள மறுக்கிறான்.

"ஏய்யா..."

"உங்ககிட்ட காசு வாங்கக் கூடாதுன்னு உத்தரவு"

"என்னயா சொல்றே.. யார் உத்தரவு போட்டது?"

"முனிதான்."

"முனியா?"

"ஆமாம் ராத்திரி சொப்பனத்துல வந்து சொன்னிச்சு."

"சொப்பனத்துல வந்துச்சா? என்னய்யா உளர்றே.."

"நான் உளறலீங்க நீங்கதான் சரியா புரிஞ்சுக்கல.."



"என்ன சொல்றே?"

"சாமி நீங்க கொடுத்து வெச்ச ஆள். அந்த முனிசாமி அருள் உங்களுக்கு நிறையவே இருக்குங்க. என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க." அவன் கை கூப்புகிறான். இளங்கோவனுக்கு பிசைகிறது.

"யோவ் நான் சாதாரண மனுஷன்."

"இருக்கலாம். ஆனா முனுசாமி கிட்டையே காசு வாங்குன ஆளாச்சே?"

"காசா?"

"ஆமாம். உங்களுக்கு அது பொற்காசு தந்திச்சாமுல்ல."

- பெட்டிக்கடைக்காரன் பேசுவதில் போலித்தனமோ நடிப்போ திட்டமிடலோ தீர்மானமோ எதுவுமில்லை. மிக எதார்த்தமாகத்தான் பேசுகிறான்.

இளங்கோவனுக்கு மனதை அது என்னவோ செய்கிறது. அப்பொழுது கூப்பிடுகிறது ஒரு குரல் திரும்பிப் பார்த்தால் முப்பது நாப்பது ஆடுகளோடு ஒரு பெரியவர்.

"ஐயா கும்புட்றேங்க."

"வணக்கம்."

"என் ஆட்டுக்கெல்லாம் கொஞ்சம் விபூதி போடுங்கய்யா. அதுங்க நல்ல விலைக்கு போகட்டும்."

"ஆட்டுக்கு விபூதி போட்றதா?"

"ஆமாங்க. அந்த முனுசாமி ஆசீர்வாதம் உன்ன மனுஷரு நீங்க. நீங்க விபூதி போட்டா சந்தைல ஆடுங்க சொன்ன விலைக்கு போயிடுமுங்க."

பெரியவரும் தன் பங்குக்கு இளங்கோவனை உருட்டி பிசைகிறார்.

பிள்ளையார் பிடிக்க குரங்காகும். ஆனால் இங்கு குரங்கு பிள்ளையாராகிக் கொண்டிருக்கிறது.

"ஐயா நீங்கல்லாம் தப்பா புரிஞ்சுகிட்டு பேசறீங்க. முனுசாமி ஆசீர்வாதம்னு என்னென்னலாமோ சொல்றீங்க. நான் சாதாரணமான மனுஷன்."

- சொல்லியபடி அங்கிருந்து விறுவிறுவென்று நடக்கிறான். முதலில் பஸ்ஸை பிடிக்க வேண்டும். மதுரையை அடைந்து முதல் காரியமாக எடிட்டர் கைலாசப் பிரகாசத்தோடு நடந்ததைப் பற்றி பேச வேண்டும்.

பிறகுதான் மற்ற எல்லா விஷயங்களுமே.

தீர்மானத்தோடு நடக்கிறான். காட்டில் மயங்கிக் கிடந்த இரவில் மழை பெய்து பொன்விளைந்த பட்டியையே உழுது போட்டிருக்கிறது. அங்கங்கே சின்னச் சின்ன செந்நீர் தேக்கங்கள். அதற்குள் அதில் குடியேறி விட்ட தவளைக்குஞ்சுகள்.

மூக்குக்குப் பிடித்த கமகமக்கும் மண் வாசம் முகர்ந்தபடி நடந்து பஸ் ஸ்டாப்பை அடைபவனுக்கு ஏமாற்றம் காத்திருக்கிறது.

"கும்புட்றேன் தம்பி. பஸ் இன்னிக்கு வராது. பந்த் தாம். இனி நாளைக்குதான். அதுவரை எங்க ஊட்ல விருந்தாளியா தங்கி இருக்கணும் நீங்க."

- முன் பின் பார்த்திராத, முகமே தெரியாத ஒரு கிராமத்தான் இளங்கோவனுக்கு வெற்றிலை பாக்கு வைக்கிறான்.



"என்னங்க இது. நான் யார்னு தெரியுமா?"

"அது தெரியத் தேவையில்லைங்க. ஆனா ஒன்னு தெரியும். முனி கோவிலுக்குப் போய் உசுரோடயும், தங்கச் சாசோடையும் திரும்பியிருக்கிறவர் நீங்க. அந்த சாமி யோட ஆசீர்வாதம் உள்ளவரு. உங்கக் காலடிபட்டா என் வீடும் கோவிலாகும்." அந்தக் கிராமத்தான் சொல்லச் சொல்ல இளங்கோவனுக்கு சிவுசிவு என்று சீவிக் கொண்டு கோபம் வருகிறது. 'உங்க முட்டாள்தனத்துக்கு ஒரு அளவு கிடையாதா?' என்று கத்த வேண்டும்போல உள்ளது. அடக்கிக் கொள்கிறான். அப்பொழுது ஒருவன் ஓடி வருகிறான்.

"ஐயா-"

"என்ன?"

"உங்களை பூசாரி கூட்டிக்கிட்டு வரச்சொன்னார்."

"எதுக்கு?"

"தெரியலீங்க. கட்டாயம் வருவீங்களாம். நீங்க ஊருக்கு போக அவர் ஏற்பாடு செய்யறாராம்."

இளங்கோவனுக்கு சற்று கிறுகிறுக்கிறது. ஆளா ளுக்கு கும்பிட ஆரம்பித்து விட்டார்கள். விட்டால் கோவில்கட்டி தன்னையே முனிசாமி என்றும் கருதி, அதில் உட்கார்த்தி வைக்கத் தயங்க மாட்டார்கள்.

விஷயம் விபரீதமாகிக் கொண்டிருக்கிறது.

முதலில் ஊரைவிட்டு செல்ல வேண்டும்.

அதற்கு ஒரே வழி பூசாரியைப் பார்ப்பதுதான்.

பார்ப்போம்.

அந்த நபர் என்ன சொல்லி எத்தனை பூ போடுகிறார் என்று பார்ப்போம்.

நடக்கிறான்.

பூசாரி குடிசை வரை நல்ல வேகமான நடை.

குடிசை வாசலை எட்டுபவன் அங்கேயே நின்று உள்ளே ஊடுருவுகிறான். செல்வந்தி முதல் நபராக எட்டிப் பார்க்கிறான்.

"உள்ள வாங்க..." என்கிறான் மிக மிருதுவாக.

"இருக்கட்டும். நான் ஊருக்கு கிளம்பணும். பூசாரி ஏதோ ஏற்பாடு செய்யறதா சொன்னாராம். எங்க அவரு?"

"இங்க இருக்கேன்பா..." - என்று ஒரு பூசணிக்காயோடு வருகிறார் பின்பக்கத்திலிருந்து.

"உள்ள வாப்பா..."

"இருக்கட்டும்."

"அட உள்ள வாய்யா - உன்னை அந்த முனியே ஒண்ணும் பண்ணலை. நான்தானா பிடிச்சு விழுங்கிடப் போறேன்."

"பரவால்ல... நான் உடனே ஊருக்கு போகணும். ஏதாவது வண்டிக்கு ஏற்பாடு பண்ண முடியுமா?"

"என்ன அவசரம்... இருந்து சாமி விருந்த முடிச்சுட்டு போப்பா..."

"சாமி விருந்தா, என்ன சொல்றீங்க?"

"உனக்கு விருந்து செஞ்சு போட்டு அனுப்பும்படி முனி உத்தரவு."



"என்னங்க இது... ஆளாளுக்கு முனி உத்தரவு - அது கனவுல வந்து சொன்னிச்சு. விருந்து சாப்பிடுங்க - விபூதி போடுங்கன்னு சொல்றீங்க. எனக்கு ஒண்ணுமே புரியலை..." - சற்று பலமாகவே.

"இதுல புரியாம போக என்ன இருக்கு தம்பி. உன் குல தெய்வத்த யார் தடுத்தும் கேட்காம கும்பிடப் போனே... யாரா இருந்தாலும் தண்டிச்சு உசுரைக் குடிக்கற அந்த சாமி, உன்னை மட்டும் மன்னிச்சிருக்கு. அது மட்டுமில்லப்பா. மூணு ஏழைப் பொண்ணுங்க பேரைச் சொல்லி அவங்கள நீ கோவிலுக்கு கூட்டிக்கிட்டு வரணும்னும் சொல்லியிருக்கு..."

- பூசாரி பெரிய குண்டாக தூக்கிப் போடுகிறார்.

"என்னது மூணு ஏழைப் பொண்ணுங்களா... யார் அவங்க, என்னங்க இது கத்தி போய் வாலு வந்த கதையா?"

"பாத்தியா நிக்க வெச்சே பேசிக்கிட்டிருக்கேன். உள்ள வாப்பா... வாப்பா..." - பூசாரி அவன் கையைப் பிடித்து உள்ளே இழுத்துச் செல்கிறார்.

அவனால் மறுக்க முடியவில்லை.

உள்ளே பளிச்சென்று தெரியும் செல்வந்தி பற்றி இழுக்கிறாள். பார்வையால் மனதை கொளுத்துகிறாள்.

"உக்காரு..." அவன் உக்காருகிறான்.

"செல்வந்தி... முதல்ல தம்பிக்கு சாப்பிட ஏதாச்சும் கொடும்மா..."

"என்ன சாப்பிடறீங்க... காபி... டீ..."

"இரண்டும் வேண்டாம். தேங்க்ஸ்..."

"இல்ல.. ஏதாவது சாப்ட்டுதான் தீரணும்."

- செவ்வந்தி சிணுங்கலாக பேசுகிறாள். சின்ன அந்த கூரை வீட்டு தடுப்பு மூலையில் ஒரு மொபைல் கேஸ் ஸ்டைவ். பத்து விநாடி அவகாசத்தில் அது கலீர் என நீலச்சுடர் விட்டு எரிய அதன் மேல் கெட்டில் ஒன்று ஏறி அமர்கிறது.

'செவ்வந்தி நீ ஆச்சரியப்படுத்திக்கொண்டே இருக்கிறாய்..' அவன் அவளை கூர்மையாக பார்க்க, பூசாரி வெளியே போய் ஒரு மாலையை எடுத்து வருகிறார். எடுத்து வந்ததை முதல் காரியமாக அவன் கழுத்தில் போடுகிறார்.

"ஐயோ என்னங்க இது.."

"மரியாதை தம்பி. முனீ சொன்னதைச் செய்யறேன் நான்."

"என்னங்க இது. முனி அது இதுன்னு.. எனக்கு அது எதுவும் சொல்லலை. நானும் அதைப் பார்க்கலை. என்கிட்ட அது பேசலை. அப்படி இருக்க, உங்களுக்கு எப்படி எனக்கு தங்க காசு கிடைச்சது தெரியும். ஒருத்தர் கனவுல வந்து சொன்னதா சொல்றாரு. இன்னொருத்தர் அதுக்கும் மேல போறாரு. என்னால் நம்ப முடியல. இதுல எல்லாம் ஏதோ கோளாறு இருக்குங்க.."

"கோளாறா.. வேணாம் தம்பி வாய்க் கழுவுங்க. சாமிய பத்தி நீங்களே தப்பா பேசலாமா?"

"தப்பா பேசல.. உள்ளததான் பேசறேன். ஒரு உண்மைய தெரிஞ்சுக்குங்க. நான் முனிசாமி பத்தி கேள்வி பட்டு ஆராய்ச்சி செய்ய வந்த ஒரு பத்திரிகை காரன். கிட்டதட்ட சி.ஐ.டி மாதிரிதான். அது என் குல



தெய்வமில்ல. நானும் அதை கும்பிடப் போகல. இதை நீங்க தெரிஞ்சுக்கணும்.."

"அப்படியா?" - பூசாரி எந்தவித உணர்ச்சியும் இன்றி சாதாரணமாக கேட்கிறார்.

"என்னங்க நீங்க... அப்படியான்னு சாதாரணமா கேக்கறீங்க. நான் உண்மையை சொல்லிட்டேன். நீங்க ளும் உண்மையைச் சொல்லுங்க. கனவு வந்தது சாமிசொன்னது எல்லாம் பொய்தானே?"

- இளங்கோ துடிப்போடு கையை ஆட்டி கேட்கும் போது கச்சிதமாக காப்பியை எதிரில் நீட்டுகிறாள் செவ்வந்தி.

"குடிங்க.. குடிச்சுகிட்டே பேசுங்க.."

"என்ன நீங்க... நான் ஒரு பெரிய உண்மையைச் சொல்லி இருக்கேன். உங்ககிட்ட எந்த விதமான ஆன்ட்டி ரீயாக்ஷனும் இல்லியே.."

"ஆன்ட்டி ரீயாக்ஷனா.. எதுக்கு?"

"நான் பக்தன் இல்ல. பத்திரிகையாளன். முனி சாமிய நானும் பாக்கல. அதுவும் என்னை பாக்கல."

"நீங்க பத்திரிகையாளர்ங்கறது எனக்கு முன்னையே தெரியும் ஆனா முனுசாமி உங்களை பாக்கலைன்னு சொன்னீங்களே அதே ஒத்துக்க மாட்டேன்."

"ஏன்?"

"நானும் உங்களை மாதிரி சொல்லிகிட்டு ஆராய வந்ததுதான். மை நேம் ஈஸ் வித்தியா. நான் இதுவரை முனிசாமிய பாத்ததில்லை. ஆனா முனிசாமி என்னை பாக்குது. தினமும் பாக்குது. என் ஒவ்வொரு அசைவையும்

பாக்குது. எனக்கு அது நிறைய கட்டளைகள் இடுது அதை செய்துகிட்டு வரேன் நான்..."

- செவ்வந்தியாகிய விந்தியா சொல்வதை கேட்டு நெற்றி புடைக்க அவளிடம் ஊன்றுகிறான் இளங்கோவன்.

"என்ன பாக்கறீங்க... நான் சொல்றது நிஜம். அதோட கட்டளைப்படி நடக்கற என்னைப்போலவே நீங்களும் நடந்துக்கப் பாருங்க. உங்களுக்குதான் அது நல்லது..."

- விந்தியாவை விறைப்பாக பார்க்கிறான் இளங்கோவன்.

"மிஸ் விந்தியா... என்ன இது? எல்லம் தெரிஞ்ச எப்படி... எப்படி இங்கே இருக்கீங்க."

"புது மரியாதை எல்லாம் வேண்டாம். என்னை செவ்வந்தின்னு நினைச்சே பேசலாம்."

"செவ்வந்தியோ - விந்தியாவோ விஷயம் இப்ப அது இல்ல. எப்படி இந்த முட்டாள்தனமான நம்பிக்கைல மாட்டிக்கிட்டு காலம் தள்றே நீ. முனி உனக்கு கட்டளை இட்டுருக்கறதா சொன்னியே என்ன அது?"

"இங்க தங்கியிருந்து அது நிகழ்த்தப் போற அற்புதங்களை பார்த்து எதிர்கால சந்ததிக்கு எழுதி வைக்கறது தான் அது எனக்கு இட்டுருக்கற கட்டளை..."

"அற்புதங்களா?"

"ஆமாம். சொல்ல முடியாத அற்புதங்கள் அவை..."

"என்ன அது?"

"போகப்போக தெரிஞ்சுப்பீங்க..."

"அப்ப முனி இருக்குன்னு நம்பறியா?"

"உறுதியா?"

"நான் நம்பலை. எல்லாம் ஃபிராட், கப்ஸா, ஏதோ சதி..."

"அப்படின்னா அத இங்க இருந்து தாராளமா கண்டு பிடிக்கலாமே..."

"நிச்சயமா கண்டுபிடிக்கத்தான் போறேன். அப்ப தான் உங்க கண்கள் திறக்கும்."

"சரி காபியை குடிங்க..." - அவள் சாதாரணமாய் சொல்கிறாள். காபி கிட்டதட்ட ஆறி விட்டிருக்கிறது. அதைக் குடிக்காமல் ஓரமாக வைக்கிறான்.

"தம்பி..." இதமாக அழைக்கிறார் பூசாரி.

"என்ன?"

"முனிமேல சந்தேகம் வேண்டாம். அது கண்கண்ட தெய்வம். காரணமில்லாம அது உங்களை உயிரோட விடலை. அதோட கட்டளையை நம்பிக்கையோட ஈடேற்றப் பாருங்க. இல்லே..."

"என்னய்யா இது கொடுமையா இருக்கு. கட்டளை நிறைவேத்து அது இதுன்னுகிட்டு. அந்த முனி அந்தக் கட்டளையை என்கிட்ட சொல்லாம உங்ககிட்ட சொன்னா என்ன அர்த்தம்? நான்தான் தைரியமா கோவிலுக்கே போனேனே..."

"இதோ பார்... சாமி சொன்னதை சொல்லிட்டேன். அப்புறம் உன் இஷ்டம்." பூசாரி விட்டேத்தியாகப் பேசுகிறார்.

"சரி என்ன அந்த கட்டளை?"

"மெட்ராஸ்ல சக்தி, சம்பா, ராஜலட்சுமின்னு மூணு பேர் இருக்காங்களாம். மூணு பேரும் ஜமீன் வம்சமாம். அவங்களை தனித்தனியா கோவிலுக்கு கூட்டிட்டு வரணுமாம் நீ..."

"என்ன இது புது மாதிரி கட்டளை. அவங்கள்ளாம் யாரு நான் எதுக்கு அவங்கள கூட்டிக்கிட்டு வரணும். ஒரே குழப்பமா இருக்கே..."

"தனி வல்லக்கோட்டை ஜமீன் குடும்பத்தவங்களாம் அவங்க. நீ மனசு வெச்சா கூட்டிகிட்டு வர முடியுமாம். அவ்வளவுதான் என்கிட்ட சாமி சொன்னிச்சு. கேக்கறதும், கேக்காததும் உன் பாடு..."

பூசாரி நறுக்கு தெறித்த மாதிரி சொன்னதோடு "விருந்து மட்டும் சாப்பிடாம போயிடாதே அப்புறம் சாமிக்கு பதில் சொல்ல என்னால முடியாது..." என்றபடி வெளியேறுகிறார். செவ்வந்தி என்னும் விந்தியா அவனை ஒரு மாதிரியாக பார்க்கிறாள். அவனும்.

# 5

**'ஜமீனை அரசிடம் ஒப்படைத்து விட வேண்டுமாம். கிட்டதட்ட ஆயிரம் வேலி நிலம் - பிரம்மாண்டமான அரண்மனை அள்ள முடியாத அளவு தங்க நகைகள். எல்லாவற்றையும் அரசு எடுத்துக் கொண்டு பதிலுக்கு ஆயிரம் பத்தாயிரம் என்று மான்யம் தருமாம். யாருக்கு யார் மானியம் தருவது?'**

**- ஜமீன்தாரின் டயரியிலிருந்து**

மூச்சிறைபட பேசி முடித்திருக்கிறான் இளங்கோவன் எதிரில் ஆசிரியர் கைலாசப் பிரகாசம்.

"சார் அங்க என்னவோ மர்மம் இருக்கு சார். ஆனா என்னன்னுதான் தெரியலை. எந்த மர்மமும் இல்ல. எல்லாம் சாமி செயல்தான்னு விந்தியாங்கற ஒரு ஜர்னலிஸ்ட் பொண்ணே நம்பறா. பெரிய கொடுமை சார் இது."

"..."

"ஊரே முனுசாமி முனுசாமின்னு கன்னத்துல போட்டுக்கறாங்க. இது அதைவிட பெரிய கொடுமை. இன்டர் நெட் யுகத்துல வீட்டுக் கூடத்துல டி.வி.ல உலகத்தையே பார்க்கற நிலையில் இன்னும் இப்படி இருக்காங்க சார் என்னத்த சொல்ல..."

"..."

"என்ன சார் பேசமாட்டேங்கறீங்க. உங்களை பார்த்தாதான் ஒரு தெளிவு பிறக்கும்னு ஓடி வந்திருக்கேன். பேசுங்க சார்..." - பொல பொலவென்று கொட்டி முழக்கிவிட்டு கைலாசப் பிரகாசம் முகத்தை ஊன்றிப் பார்க்கிறான்.

அவர் பேப்பர் வெயிட்டை சுழற்றியபடி தீவிர சிந்தனை வசப்படுகிறார்.

"என்ன யோசனை... உங்களுக்கும் குழப்பமா இருக்கா?"

"இல்ல இளங்கோவா - நீ சொன்னதுல சூட்சமமா ஏதோ ஒன்னு இருக்கறதா எனக்கு படுது. அதான் யோசிக்கறேன்."

"சூட்சமமாவா?"

"ஆமாம் - பூசாரி சின்சியரா பூஜை செய்ததை பார்த்திருக்கே. ஊரும் பலத்த நம்பிக்கையோட இருக்கு

அழகான ஒரு ஜர்னலிஸ்ட் பெண்ணும் நம்பிக்கையோட அங்க டேரா போட்டு அற்புதங்களை கவனிச்சு எழுதற முடிவுல இருக்கா.

தப்பா சமூகவிரோத செயல்கள் நடக்க வாய்ப்பில்லாத மாதிரிதான் சூழ்நிலைகள் இருக்குன்னு வேற சொல்றே... இவ்வளவையும் கூட்டி கழிச்சு பார்த்தா சூட்சமமா அங்கே ஏதோ ஒண்ணு இருக்கு..."

"ஆமாம், எனக்கு அது என்னன்னு புரியலை. தங்கக் காசுகளை எனக்கு லஞ்சமா தந்துட்டதாதான் படுது. நான் பக்தியில் மயங்கி வாயடைச்சு போயிடுவேன்னு முனுசாமி அலைஸ் மனுஷன் நினைச்சிருக்கணும்."

"எதுக்கும் க்ரைம் ப்ராஞ்ச் விட்டல்கிட்ட பேசுவோமா?"

"யார் சார் அவர்?"

"அந்த முனியன்சாமிய பத்தி என்கிட்ட முதல்ல சொல்லி ஆ... ஊன்னு பேசினவர். அவங்க டிபார்ட்மெண்ட்டே அந்த முனுசாமியை நம்பி அந்த முனியன் மலையை போட்டோ எடுத்து தங்களோட பர்ஸ்ல வெச்சுருக்காங்கன்னா பார்த்துக்கோயேன்..."

"அவர் சொல்லிதான் நீங்க என்னை அந்த முனியன் குன்றுக்கு அனுப்பனீங்களா... வெறும் கவர் ஸ்டோரிக்கு தானா என் அட்டெம்ப்ட்..."

"நிச்சயமா இல்லை. ஒரு உண்மையை நீ தெரிஞ்சுக்கணும்..."

"எந்த உண்மைய சார்..."

"மனசு திடப்படுத்திக்கோ இளங்கோ..."

"சார் பீடிகை போடாது விஷயத்தை சொல்லுங்க..."

"உனக்கு ரஞ்சித்தை தெரியும்தானே?"

"எந்த ரஞ்சித்- நம்ப சீனியர் ரிப்போர்ட்டர்..."

"அவனேதான். பிரஸ் கிளப் லீடரான அவன் இப்ப எங்கன்னு தெரியுமா?"

"ஜர்னலிசம் பண்ண யூ.எஸ். போயிருக்கார்னு கேள்வி."

"அப்படியா... ராயப்பேட்டை ஜி. எச். ல உள்ள மார்ச்சுவரி ஸ்டாக் ரூம்ல போய் பார். ரேக் நம்பர் 802ல் கிட்டதட்ட ஒரு மாசமா உறைஞ்ச நிலைல பிணமா கிடக்கிறான்!"

"வாட்?"

"ஆமாம்..."

"என்ன சார் இது- இதை ஏன் ரகசியமா யாருக்கும் தெரியாம வெச்சிருக்கணும்?"

"காரணமாதான் இளங்கோ. யூ. எஸ். கிளம்ப முனியன் குன் றதுக்கு முந்தி குலதெய்வம்னு சொல்லி எதைப் பார்த் றுக்கு கும்பிடப் போயிருக்கான் ரஞ்சித். பேச்சே வரலை. தானோ. எங்க பார்த்தானோ? பயத்துல விழுந்துட்டான். ஊர் திரும்பி அடிக்கடி மூர்ச்சையாகி காட்டினதுல மெண்ட் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் சொல்லிட்டாங்க டலி ஏதோ பெரிய அதிர்ச்சின்னு என்னை விட்டுடு ஆனா அவனோ முனியா- முனியா- என்னை விட்டுடுன்னே சொல்லிட்டிருந்துருக்கான். ஒரு நாள் நைட் ஆஸ்பத்திரி பெட்லருந்து அப்படியே மேல

ஏறி. மாடிக்குப்போய் நின்னுருக்கான். நின்ன நிலையில, முனியா நான் உன் உத்தரவுப்படி நான் உன்கிட்டையே வந்துடறேன்'னு பலமா கத்திகிட்டு மாடியில இருந்து கீழே குதிச்சு தற்கொலை செய்துகிட்டான்."

"என்ன சார் இது- ரஞ்சித் எனக்கு நல்லா தெரிஞ்ச மனுஷன். சொல்லாம மறைச்சிட்டீங்களே ஏன்?"

"காரணமாத்தான். ரஞ்சித் உயிரோட இருக்கும் போதே தன் உடம்பையும், கண்களையும் ஹாஸ்பிடல்ல டாக்டர்ல டிஷ்கஷனுக்கு யூஸ் பண்ணிக்க எழுதிக் கொடுத்திருந்தான். அதனால உடம்பை ஆஸ்பத்திரிக்கு கொடுத்துட்டோம். அதே சமயம் அவன் செத்துட்டது தெரியாம பண்ணினா ஏதாவது க்ளு கிடைக்குதா- யாராவது ரஞ்சித்தைத் தேடி வராங்களா பாக்கலாம்னு ஒரு ஆசை.

அதோட இந்த மரணம் பல ரிப்போர்ட்டர்ஸ"க்கு முனியன் குன்று சம்பந்தமா மோடிவேஷனை கிரியேட் பண்ணலாம். பலர் எடை எடுக்கலாம். அதனால எந்த உண்மையும் யாருக்கும் தெரியாம போகலாம் ஸோ... இவ்வளவு விஷயங்கள் இருக்கு, இதுக்கு பின்னால... அன்னிக்கே ஒரு நபரை மட்டும் அனுப்பி ஷார்ப்பா முனியன் குன்று பத்தி தெரிஞ்சுக்க நான் முடிவெடுத்துட்டேன். போலீஸ் தன் பங்குக்கு அனுப்பியிருக்கிற ஆள் தான் விந்தியா!

கைலாச பிரகாசம் வரிசையாக விளக்கி விட்டு விந்தியா யார் என்று கூறி முடிக்கும்போது இளங்கோவனிடம் தாள முடியாத அதிர்ச்சி.

"என்னது... விந்தியா போலீஸ் ஆளா?"

"ஆமாம். சாமர்த்தியமா போய் பூசாரியை கைக்குள்ள போட்டுகிட்டு டேரா போட்டுட்டா. அவ போலீஸ்தரப்பு பிரதிநிதி. நீ பத்திரிகை தரப்பு நபர்."

"மைகாட்— ஒரு பொம்பள இவ்வளவு துணிச்சலா அங்கேயே தங்கி வேவு பார்த்துகிட்டு இருக்கா. நான் ஓடி வந்துட்டேனே—"

"பாதகமில்லை. யாரோ மூணு பேர் பேரை சொல்லி அவங்களை கூட்டிக்கிட்டு குன்றுக்கு வரச்சொல்லி உத்தரவு போட்டிருக்குல்ல முனுசாமி."

"ஆமாம். அதை பிடிச்சுகிட்டு நானும் டேரா போடவா—"

"போட்டாகணும். அந்த குன்றோட சூட்சமம் என்னன்னு கண்டு பிடிக்கணும். ஏன் ரஞ்சித் முனிசாமிய பார்த்து அப்படி பயந்தான்னு தெரியணும். அவனது தற்கொலையோட பின்புலம் தெரிய வரணும்."

"நிச்சயமா... விட மாட்டேன் சார். இப்பவே அந்த மூணு பேரோட நான் திரும்ப முனியன் குன்று போறேன்."

"ஆமா அந்த மூணு பேர் எங்க இருக்காங்கன்னு தெரியுமா?"

"தனி வல்லக்கேட்டை ஜமீன் பிரதிநிதிகளாம் அவங்க. பேர் சக்தி, சம்பா, ராஜலட்சுமியாம்- அட்ரஸ் தெரியாது. ஆனா நான் எப்படியும் கண்டுபிடிச்சுடு வேன்னு பூசாரி சொன்னார்—"

"கண்டு பிடிக்கலாம். அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லை. கலெக்டருக்கு போன் பண்ணி ஜமீன் வம்ச பிரதிநிதிகள் - அவங்களுக்கு மான்ய

தருவது பத்தி கொஞ்சம் விசாரிச்சா அவங்க இருக்கற இடம் தெரிஞ்சுடும். அப்புறமா அவங்கள பார்த்து சாமர்த்தியமா செயல்படுவோம். கவலைப்படாதே..."

"அப்ப இப்பவே கலெக்டருக்கு போன் பண்ணுங்க சார்.. முதல்ல நான் அவங்களைச் சந்திக்கறேன்..."

"விவேகமா..."

"நிச்சயமா..."

- கைலாசப் பிரகாசம் ரிசீவரை எடுத்து எண்களைச் சுழற்றத் தொடங்குகிறார். சுழற்றி அடித்துக் கொண்டிருக்கும் முனியன் குன்று மர்மத்தைப் போல...

# 6

**'நான் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த போது முனீஸ்வரனைத்தான் மிக உபாசித்தேன். நமது மதம் நாம் எதை நினைக்கிறோமோ அதுவாகவே ஆவதாக கூறுகிறது.**

**நானும் என் குலதெய்வத்தை நினைத்து ஜெபிப்பதால் அதுவாக ஆகிவிடுவேனோ?'**

- ஜமீன்தாரின் டயரியிலிருந்து

**தொ**லைபேசியின் சுழற்சியில் அகப்படுகிறார் மாவட்ட கலெக்டரின் பி.ஏ.

"சார் நான் மணிமாலை எடிட்டர் கைலாசம் பேசறேன். எனக்கு சில முக்கியமான தகவல்கள் வேணும். ஒரு ஆர்டிகிள் தொடர்பா..."

"---"



"தனி வல்லக்கோட்டை ஜமீன் பிரதிகள்னு இப்ப யாரும் மான்யம் வாங்கிகிட்டு இருக்காங்களா? ஸ்பெஷல் அலவன்ஸ், பென்ஷன்னு அவங்களுக்கு கவர்மெண்ட் எது கொடுத்தாலும் சரி, கொடுக்கலேன்னாலும் சரி, அவங்கள பத்தின தகவல்கள் வேணும்."

"---"

"நாளைக்கு கலெக்டரை பார்த்து வாங்கிக்கவா. நன்றி. நிச்சயமா நல்ல காரியத்துக்குதான் கேக்கறேன். கலெக்டர் சார்கிட்ட சொல்லுங்க. மை பெஸ்ட் விஷஸ் தேங்க்யூ."

- தொலைபேசியை முடக்கி விட்டுத் திரும்புகிறார்.

"என்ன சார் நாளைக்குன்னுட்டாங்களா?" - கேட்கிறான் இளங்கோவன்.

"பின்ன என்ன, கேட்ட உடனே தூக்கிக் கொடுத்துடுவாங்களா? அது என்ன சாதாரண விஷயமா?"

"கிடைச்சிடும் சார்?"

"கலெக்டர் என் கல்லூரித் தோழர். ஆகையால நிச்சயம் கிடைக்கும்கற நம்பிக்கை இருக்கு. பார்க்கலாம்."

"அப்படி கிடைச்ச பிறகு அங்கள மீட் பண்ணப் போறோம். அப்ப என்ன பண்றதுன்னு இப்பவே பேசிடலாமா?"

"என்ன பேசினாலும் ரிசல்ட் நாம விரும்பற மாதிரி இருக்கணும். அவங்க ஒத்துகிட்டு உன்கூட முனியன் குன்றுக்கு வரணும். தைரியமா மலை ஏறி கோவில் மரத்தடியில் உன்னோட படுக்கணும். அதுக்கப்புறம் என்ன நடக்கப் போகுதுங்கறதுலதான் அந்த குன்றை பத்தின மர்மத்துக்கு விடையே இருக்கு..."

"ஒருக்கால் எனக்கும் அவங்களுக்கும் ஏதாவது ஆபத்து ஏற்பட்டா?"

"ஆபத்துன்னா?"

"ரொம்ப தெளிவான மனுஷன் ரஞ்சித். அப்படிப் பட்ட ரஞ்சித்தே மலைக்கு போய் வந்து புத்தி மாறிப் போய் தற்கொலை செய்துகிட்டதா சொல்றீங்க. இவங்களுக்கும் அந்த மாதிரி ஏதாவது..?"

"நல்ல கேள்விதான் நீ கேட்டிருக்கறது. அப்படி எதுவும் ஆயிடாம பார்த்துக்கணும். என்னா இது ஒரு டேஞ்சரஸ் அட்டெம்ப்ட். முடிவு எப்படி வேணா ஏற்படலாம்.

அவங்களுக்கு மட்டுமில்ல இளங்கோவன் - உனக்கும் எதுவும் ஏற்பட்டுடக் கூடாது. இது எனக்கு ரொம்ப முக்கியம்."

"என்னை பத்தி எனக்கு கவலையில்லை சார். ஆனா ஒண்ணு. அந்த மலையில் என்னதான் நடக்குதுங்கறத தெரிஞ்சுகிட்டே தீரணும். விடக் கூடாது.."

"இதே தீவிரத்தோடதான் விந்தியாவும் அங்க தங்கியிருக்கா. அடுத்த முறை போகும்போது பேசிப் பார். ஏதாவது க்ளு கிடைக்கலாம்."

"நிச்சயமா.. எதுக்காக இல்லேன்னாலும் விந்தியாவுக்காக நான் அங்கே போயே தீருவேன்."

"ஏன்.. ஒரு கிராமத்துப் பெண்ணாட்டம் நடிச்சு உன்னை ஏமாத்திட்ட கோபமா?"

"கோபம் இல்ல, ஆச்சரியம்."

"பார்த்து... அது வேற ஏதாவது ஆகிடப் போகுது?"



"வேறு ஏதாவதுன்னா?"

"ஓகே. நாளைக்கு காலை பத்து மணிக்கு கலெக்டர் வீட்டுக்கு வந்துடு. மிச்சத்தை அங்க பேசிக்கலாம்.."

அவன் கேள்விக்கு பதிலின்றி வேறு விதமாக ...கிறார் சரியான ஆள்தான்.

அவன் முகத்திலும் விளக்கெண்ணெய் வடிசல்!

பத்து மணி.

கலெக்டர் அலுவலகம் களை கட்டத் தொடங்கும் நேரம். ஒவ்வொருவராக உள்ளே நுழைந்து அரை மனதாய் சீட்டில் அமர்ந்து கலைந்த தலையை வாரி விட்டுக் கொள்கிறார்கள்.

முதல் டீ யை மிக உரிமையோடு வலைத்தூக்கில் வைத்துச் சுமந்தபடி செக்ஷன் செக்ஷனாக சுற்றி வந்து கொண்டிருக்கிறான் ஒரு பனியன், லுங்கி மனிதன்.

ஆபீசுக்கு வெளியே அதை எழுதித்தர, இதை காப்பி எடுத்துத் தர என்று ஒரு கூட்டம்.

தன் மோட்டார் பைக்கில் வந்து இறங்குகிறான் இளங்கோவன். ஓரம் கட்டி நிறுத்தப் போனவனை பார்த்துவிட்டு ஒருவன் ஓடிவருகிறான்.

"என்னய்யா?"

"பைக் டோக்கன்.."

"எதுக்கு?"

"இங்க வண்டிய நிறுத்த ஏலம் நான் எடுத்திருக்கேன்."

"எவ்வளவு?"

"மூணு ருவா..."

"ஒரு ருவாதானே?"

"அது அந்தக் காலம்..."

"நான் கலெக்டரைத்தான் பார்க்க வந்துருக்கேன். அவர் கிட்ட கேக்கவா..."

"சரி சரி ஒத்த ருவாயே தா..."

"அது கூட கிடையாது. ஏலமா எடுத்திருக்கே ஏலம். உன்னை வந்து பேசிக்கறேன்..."

இளங்கோ கோபம் காட்டி நகர - அவன் முறைக்க - நடை வளர்ந்து கலெக்டர் அறைமுன் முடிகிறது. சொன்னபடி காத்திருக்கிறார் கைலாசப் பிரகாசம்.

"வாய்யா... ஏன் லேட்டு?"

"என்ன சார் அநியாயம். கலெக்ட்ரேட்ல வண்டி நிறுத்த மூணு ருவா கேட்கிறான்."

"ஜனநாயக நாடு - அப்படித்தான். திசை திருப்பாம நம்ம விவகாரத்த பேசுவோம் உள்ற வா..."

இருவரும் சேர்ந்து உள் நுழைய நல்ல வரவேற்பு. கலெக்டர் அர்ஜுன் எழுந்து நின்று வரவேற்கிறார். பேச்சில் நட்பு தெரிகிறது.

"வா கைலாஷ்... எங்க இவ்வளவு தூரம்?"

"என்ன அர்ஜுன்... உன் பி.ஏ. சொல்லலையா?"

"சொன்னார் - உட்கார். என்னப்பா ஜமீன் பிரதி நிதிகளை எல்லாம் தேட ஆரம்பிச்சுட்டே. என்ன விஷயம்?"

"சொல்றேன் அர்ஜுன். அவங்க யார்னு தெரிஞ்சதா இப்ப இருக்காங்களா?"

"இப்பல்லாம் யார்க்கும் மான்யம் தர்றதில்லை கைலாஷ். பல்க்கா ஒரு காம்பன்சேஷன் தந்து ஃபைலை குளோஸ் பண்ணிட்டோம். அந்த வகையில தனி வல்லக் கோட்டை ஜமீன் கதை ஒரு வித்தியாசமான கதை..."

"என்ன அது... தெரிஞ்சுக்கலாமா?"

"நீ எதுக்கு கேக்கறன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"முனியன் காடு கேள்விப்பட்டிருக்கியா?"

"எங்கையோ கேள்விப்பட்ட பேரா இருக்குல்ல..."

"எங்கையோ இல்ல. இந்த டிஸ்ட்ரிக்ட்ல உள்ள ஒரு புதிரான குன்று அது. மேற்குத் தொடர்ச்சி மலை வரிசைல சற்று விலகி நிக்கற பச்சை கூமாச்சி மலைச் சாரல்ல இருக்கு..."

"யெஸ்... யெஸ்... அங்ககூட ஒரு புளியமரம் - அதுக்கு கீழ் ஒரு முனீஸ்வரன் கோவில்... ஆம் ஐ கரெக்ட்..."

"இவ்வளவுதான் தெரியுமா? இதுக்கு மேலே தெரியாதா?"

"இதுக்கு மேல என்ன தெரியணும். இட் ஈஸ் எ பில்கிரிமேஜ் பிளாக் ஓர்ஷிப்லாம் நடக்கற ஒரு இடம்..."

"ஓர்ஷிப் நடந்ததெல்லாம் ஒரு காலத்துல... இப்ப அந்த மலைல ஒரு மாடுகூட மேய பயப்படுது... தெரியுமா உனக்கு?"

"ரியலி?"

"முதல்ல இது சம்பந்தமா க்ரைம் ப்ராஞ்ச் ஸ்பெஷல் ஆபீசர் சதானந்தனை காண்டாக்ட் பண்ணு அவர் மிச்சத்த சொல்வார்..."

அடுத்த நொடி சதானந்தனை பிடிக்க தொலைபேசி எண்கள் தட்டப்படுகின்றன. சிணுங்கல், முனங்கல்களுக்கு நடுவில் சதானந்தமும் அகப்படுகிறார்.

"சதா- ஐ ஆம் அர்ஜுன் ஸ்பீக்கிங்..."

"சொல்லுங்க சார்..."

"முனியன் குன்றுங்கற பெக்கூலியர் ஹில் பத்தி எனக்கு தெரியணும். அங்க என்ன பிராப்ளம்?"

"ப்ராப்ளம்னு எதை சார் சொல்ல? அந்த கோயிலுக்கு ஜனங்க யாரும் வரக்கூடாதுன்னு சாமி சொல்லிடிச்சாம். பூசாரி மட்டும் ராத்திரியில போய் சாமபலி பூஜை செய்துட்டு வராரு. சாமி உத்தரவை மீறி மலைக்கு யார் போனாலும் அவங்க செத்துப் போயிடறாங்க..."

"இட் ஈஸ் ரிடிகுலஸ்... எந்த சாமி யார்கிட்ட சொன்னிச்சு?"

"முனீஸ்வரன் சார்... ஊர் ஜனங்க நடுவுல சாமி வந்து சொன்னிச்சு..."

"இது இன்டர்நெட் யுகம்.. டு யூ பிலிவ் தட்?"

"சார்- இட் ஈஸ் ய சென்சிடிவ் மேட்டர். ரிலிஜியஸ் விவகாரங்கள்ள ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்னு சி.எம். தன்னுடைய பர்சனல் நோட்ல சொல்லியிருக்காரு..."

"ஓ.கே.. நான் அப்புறமா பேசறேன். எதுக்கும் அந்த மலை மேல ஒரு கண் இருக்கட்டும். சாமி சொன்னதா சொல்லிட்டு ஆசாமிங்க யாராவது மலைல இருக்கற மரங்கள வேற பக்கமா கொண்டுகிட்டு போயிடப் போறாங்க."

"நோ சார்... நம்ம டிபார்ட்மெண்ட்டோட விஜிலன்ஸ் குரூப் அங்க எப்பவோ போய் சேர்ந்தாச்சு. இந்த விவகாரம் பெரிய புதிரா இருக்குங்கறதுதான் அவங்க ரிப்போர்ட்டும்..."

"ஐ சீ.. ஓ.கே.. ஐ வில் டிஸ்கஸ் லேட்டர்."

- போனை முடக்கியபடி நிமிர்கிறார் கலெக்டர் அர்ஜீன். அரைச் சிரிப்புடன் ஆழப்பார்வையுடன் எதிரில் கைலாசப் பிரகாசம்.

"யூ ஆர் ரைட் கைலாஷ். அந்த ஹில் பத்தி காண்ட்ரவர்ஸியா ஏதோ இருக்கு. புதிரா இருக்குங்கறார் எஸ்.பி. நீ என்ன சொல்லப் போறே..?"

"சம்திங்க ராங் அர்ஜீன். அது என்னன்னு கண்டு பிடிக்க ஒரு ஆயுதம்தான் இந்த தனி வல்லக்கோட்டை ஜமீன் பிரதிநிதிகள்...."

"இவங்க ஆயுதமா? எப்படி?"

"இவர் பேர் இளங்கோவன். சாரி டென்ஷன்ல அறிமுகப்படுத்த தவறிட்டேன்."

"ஹலோ..."

"ஹலோ..."

"இவர நான் விசாரிச்சுகிட்டு வர அனுப்பினேன். போன இவரும் ரொம்ப சாதுர்யமா மலை ஏறி அங்கேயே தங்கிட்டார். தங்கிட்ட இவருக்கு ராத்திரியில ஒண்டரான எக்ஸ்பீரியன்ஸ். பூசாரி வந்து ஆடு வெட்டி

பூஜை செய்துருக்கான். அப்படி வெட்டுன ஆட்டை ஒரு இரண்டு நிமிஷ கால அளவுல அந்த முனி வந்து தூக்கிட்டும் போயிடிச்சாம்...

ஒரு குதிரை ஒண்ணு வந்துச்சாம். யாரோ சிரிக்கற சப்தம் கேட்டுருக்கு. இவரும் மிரட்டப்பட்டிருக்கார்.

கோயில் சுவரில் இவருக்கு மெசேஜ் ஒண்ணும் எழுதப் பட்டிருக்கு. அதன்படி அந்த முனீஸ்வரன் ஏகாந்தத்துல இருக்காராம்.

ஆகையால அந்தக் குன்றுக்கு யாரும் வரக் கூடாதாம்.

இன்க்ளூடிங் இவரும்...

இருந்தாலும் இவருக்கு இரண்டு தங்கக் காசை பிரசென்ட் பண்ணியிருக்கு முனி.

"என்னப்பா, ஏதாவது தெலுங்கு சினிமாக்கு கதை கிதை எழுதியிருக்கியா... என்னால நம்ப முடியலை!"

"சித கோல்டு காயின்ஸ்..."

- கைலாசம் அந்த தங்க நாணயங்களை எடுத்து எதிரில் நீட்டுகிறார். வாங்கிப் பார்க்கும் கலெக்டர் முகத்தில் வியப்'பூ'க்கள்.

"ஒரு கோயில்ல கோல்டு காய்ன் பரிசா கிடைக் குதுன்னா நம்ப முடியல... அதுசரி, இந்த காய்னை எதுக்கு பிரசன்ட் பண்ணியிருக்கு அந்த சாமி?"

"அட்ராக்ட் பண்ணத்தான். நெகிழ்ந்து போய் கன்னத்துல போட்டுக்கத்தான்."

"ஐசி... சரி, தனி வல்லக்கோட்டை ஜமீன் பிரதி நிதிகளுக்கும் இந்த கோயிலுக்கும் என்ன சம்பந்தம்?"

"அவங்களை அந்த கோயிலுக்கு கூட்டிக்கிட்டு வந்து தங்கச் சொல்லி உத்தரவு..."

"யார் முனீஸ்வரனா?"

"வேற யார் - கடவுள் முனீஸ்வரனா - இல்லை மனுஷன் முனீஸ்வரனா - எதுக்கு இந்த உத்தரவு - இவங்களுக்கும் அந்த சாமிக்கும் என்ன சம்பந்தம்... எல்லாம் அவங்கள பாத்தாதான் விளங்கும்..."

கலெக்டர் அர்ஜீன் அதைக் கேட்டு ஒரு தினுசாக யோசித்தார்.

"எதுக்கு யோசிக்கறே அர்ஜுன்."

"சொல்றேன். நீ நேத்து பி.ஏ.க்கு போன் பண்ணி சொன்னவுடனேயே ட்ரெஷரி அக்கௌண்டன்ட்டுக்கு போன் பண்ணி விசாரிச்சேன். அவர்தான் இந்த கலெக்டரேட்ல மோஸ்ட் சீனியர். தனி வல்லக்கோட்டை ஜமீன் பத்தி வித்தியாசமா நிறைய சொன்னார்..."

"என்ன... என்ன?"

"அதோட ஜமீன்தார் தாணுலிங்க பூபதி ஒரு ஜெயில் கைதி... சமஸ்தானத்தை கவர்மெண்ட்கிட்ட ஒப்படைக்க விருப்பமில்லாம அது சம்பந்தமா பேச்சு வார்த்தை நடத்தப் போன அதிகாரிகளை கோபத்தால சுட்டுக் கொன்னு கைதானவர். ஜெயில்ல இருந்த அவர், அவர் மனைவி சாவுக்கு பெயில்ல வெளிய வந்தப்ப தப்பிச்சுட்டார். அவரைப் பிடிக்கப் போன போலீசை பல மாதிரி சமாளிச்சாலும் ஒரு கட்டத்துல அகப் பட்டுக்கிட்டார். போலீஸ் சுத்தி வளைக்கவும் தனக்கு தானே நெருப்பு வெச்சுக்கிட்டு தற்கொலை செய்து கிட்டாராம்.

அவருடைய சட்டபூர்வமான மனைவிக்கு வாரிசுகள் இல்லை. ஆனா அவர் பல வைப்பாட்டிகளை வெச்சிருந்துருக்காரு. அவங்களோட வாரிசுகள் தான் சக்தி, சம்பா, ராஜலட்சுமி இவங்கள்லாம்... இவங்களுக்கு ஜமீன் மான்யத்துல பங்கு இல்லைன்னு கோர்ட்ல தீர்ப்பாயிடிச்சு. அரசாங்கம் தந்த மான்யமும் தானுலிங்க பூபதியோட மச்சினன் ராஜலிங்க பூபதிக்கு கொடுக்கப்பட்டு, இப்ப அவரும் உயிரோட இல்லை. இந்த சக்தி, சம்பா, ராஜலட்சுமி இவங்க இப்ப ரொம்ப வறுமைல வாடிக்கிட்டிருக்கறதா கேள்வி. கோர்ட்ல இவங்களுக்கு எதிரா வந்த தீர்ப்போட ஒரு பிரதி கவர்ன்மெண்ட்டுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. இந்த வகைல கலெக்டர் ஆபிஸ் ஃபைல்ல அந்த தீர்ப்பை தேடிக் கண்டுபிடிச்சு பார்த்தேன். அந்த தீர்ப்புல அவங்க முகவரி இருக்கு. ஆனா பல வருஷத்துக்கு முந்தின முகவரி. இப்ப மாறியிருக்கலாம்."

ஒரு குட்டி பிரசங்கமே செய்து, முகவரி இருப்பதாக கலெக்டர் அர்ஜுன் கூற, இளங்கோவனிடம் குஷி பிய்க்கிறது.

# 7

**'என் பாட்டன், முப்பாட்டன் சொத்து இது... இதை அரசு எடுத்துக் கொள்ளுமாம். அதற்கு ஈடாக நாய்க்கு எலும்புத்துண்டு போல எதையோ தருவார்களாம். நூறு கோடி மதிப்புள்ள சமஸ்தானம் இது... இதை அரசுக்கு தர நானொண்ணும் இளிச்சவாயனில்லை. எனக்கு முனியன் அருள் இருக்கிறது. அது என்னை காப்பாற்றும்.'**

ஜமீன்தாரின் டயரியிலிருந்து



கலெக்டர் ஆபீசில் கிடைத்த முகவரியோடு அந்த இடத்திற்கு தேடிப் போனதில் 'அப்படி இங்க யாரும் இல்லைங்களே...' என்னும் பதில்.

சோர்வு கவ்வுகிறது.

குருடன் யானையைத் தடவிப் பார்க்கிற மாதிரி இருக்கிறது.

நல்லவேளை... ஒருவன் "சம்பாங்கற அந்தம்மா இப்ப நாகமலை புதுக்கோட்டைல உள்ள ஹைஸ்கூல்ல டீச்சரா இருக்காங்க. அங்க போனா பார்க்கலாம்" என்கிறான்.

இது போதாதா இளங்கோவனுக்கு...?

அந்தப் பள்ளிக்கூடத்தை தேடிப் போனதில் ஒரு ஐம்பத்தெட்டு வயதை நெருங்கும் பெண்மணி அவன் முன் வந்து நிற்கிறாள்.

நரை விழுந்த தலை...

வெளிச்சமே இல்லாத விழிகள்.

பழுப்புத் தட்டிப் போன சேலை.

வறுமை அங்குலத்துக்கு அங்குலம் தெரிகிறது.

"வணக்கம். நான்தான் சம்பா... உங்களுக்கு என்ன வேணும்?"

"நான்... நான் இளங்கோவன் - மணிமாலை பத்திரிகை ரிப்போர்ட்டர். நீங்க ஜமீன் வம்சம்தானே?"

"பச்ச்... யார் சொன்னது?"

"சொல்றேன். நீங்க ஜமீன் வம்சம் தானே?"

"அதான் கோர்ட்ல இல்லைன்னு தீர்ப்பாயிடிச்சே. அத எதுக்கு இப்ப கேக்கறீங்க..."

"காரணமாத்தான்மா... உங்களுக்கு சக்தி, ராதுலட்சுமி இவங்களை எல்லாம் தெரியுமா?"

"நல்லா தெரியுமே... ஆனா சக்தி இப்ப உயிரோட இல்ல. ராதுலட்சுமி இருக்கா. என்னைப் போலவே தப்பான வழியில் பொறந்தவ. அந்த முனீஸ்வரன் ஏன் தான் எங்களை இப்படி சோதிக்கிறானோ?"

"என்ன சொன்னீங்க... முனீஸ்வரனா?"

"ஆமாம்... எங்க குலதெய்வம் முனீஸ்வரன்... அது இருக்கட்டும், என்னையே கேள்வி கேட்கறியே, எதுக்கு கேட்கறேன்னு சொல்ல மாட்டேங்கிறியேப்பா..."

"சொல்றேம்மா - கூமாச்சி மலை முனியன் குன்னுக்கு போயிருந்தேன்..."

"எங்க குலதெய்வம் கோயில் அது அங்க இப்ப யாரும் போகக் கூடாதுன்னு சொல்வாங்களே..."

"ஆமாம்மா... இருந்தும் நான் துணிஞ்சு போனேன். போன இடத்துலதான் முனீஸ்வரன் உங்களைப் பத்தி சொல்லி உங்களைக் கும்பிட வரச் சொன்னிச்சு..."

"நிஜமாவா?"

"இல்லேன்னா எனக்கு எப்படிம்மா உங்க பேர் தெரியும்..."

"முனீஸ்வரா... கண் திறந்துட்டியா?"

அந்த பெண்மணி கைகூப்பி சிலிர்த்துப் போகிறாள்.

"உங்களுக்கு அந்த சாமிமேல அவ்வளவு நம்பிக்கையா?"



"நம்பிக்கையா... என்னப்பா சொல்லிட்டே... நாங்க இப்ப உசிரோட இருக்கறதே அதோட அனுக்கிரகத்தால தான்... அந்த சாமிக்கு அவ்வளவு சக்தி."

"அப்படின்னா உடனே கிளம்புங்க. எனக்கு அது இட்ட கட்டளையை நல்லபடியா முடிச்சுடறேன்."

"இருப்பா. அந்த சந்தோஷ விஷயத்தை ராதுலட்சுமிக்கு சொல்லிடறேன். ஆஸ்துமா பேஷண்ட்டான அவ இதைக் கேட்டா ரொம்ப சந்தோஷப்படுவா..."

"அவங்க எங்க இருக்காங்க?"

"அவ பக்கத்து சூப்பர் மார்க்கெட்ல பில் போட்றவளா இருக்கா..."

"ஜமீன் பிரதிநிதிகளா இப்படி இருக்கீங்க?"

"திரும்பத் திரும்ப அதையே சொல்லி வெறுப்பேத்தாதப்பா."

அந்த பெண்மணி சற்று செல்லமாகக் கடிந்து கொள்கிறாள்.

அவனுக்கு லேசாக வலிக்கிறது. கொஞ்சம் சிலாக்கியமாகவும் இருக்கிறது.

கிட்டத்தட்ட பழம் நழுவிப் பாலுக்கு வந்துவிட்டது.

'யாரது முனி... நான் எதற்கு வர வேண்டும்? ஏன் வர வேண்டும்?' என்று கேட்க இடம் இருந்தும் அப்படியெல்லாம் கேட்காமல் உடனேயே கிளம்பும் இவர்களை என்னவென்று சொல்வது? முனீஸ்வரா...

அவனும் அந்த சாமியையே சந்தோஷத்துடன் கூப்பிடுகிறான். பிறகு நாக்கைக் கடித்துக் கொள்கிறான்.

மாலை போடாத குறையாக வழியனுப்பி வைத்திரார் ஆசிரியர் கைலாசப் பிரகாசம். கூடவே கலெக்டரிடம் இருந்தும் எச்சரிக்கை மற்றும் வாழ்த்துச் செய்தி. எஸ்.பி. மட்டும் அந்தளை உற்சாகமாக இதை ஸ்லாகிக்கவில்லை.

"இது எங்க டிபார்ட்மெண்ட் வேலை - உங்களுக்கு எதுக்கு ரிஸ்க்?"

- என்று கேட்கவும் தவறவில்லை.

"பத்திரிகையாளனும் ஒரு போலீஸ்தான் எஸ்.பி. சார்..."

- என்று அவரை சமாளிக்கவே கிட்டதட்ட அரை மணி நேரம் ஆனது.

எல்லாம் முடிந்து பஸ் ஏறிக் கிளம்புகிறான் இளங்கோவன். கூடவே கறுப்பு புடவை உடுத்திக் கொண்டு அவனோடு சம்பா - ராஜலட்சுமி என்கிற அந்த இரண்டு ஜமீன் பிரதிநிதிகளும்...

பஸ் கிளம்பிச் சீறுகிறது.

இளங்கோவன் வெளியே பார்த்தபடி. கேட்கிறான்.

"எதுக்குங்க கறுப்புப் புடவை உடுத்தியிருக்கீங்க?"

"முனீஸ்வரனை நாங்க கும்பிடப் போகும் போது கறுப்புப் புடவை உடுத்திக்கிட்டு போகணும்கறது சாங்கியம்."

"ஏன்?"

"அதெல்லாம் தெரியாது... பரம்பரை பரம்பரையா இதான் வழக்கம்." அவர்கள் சீரியஸாக பதில் தருகின்றனர். அடிக்கடி கண்கள் மூடி முனீஸ்வரா... முனீஸ்வரா... என்று பிரார்த்தனை மயக்கம் வேறு சொல்கின்றனர்.

பார்த்துக்கொண்டே வருகிறான்.

பொன்விளைந்த பட்டிக்குள் பஸ் ஓரம் கட்டி நிற்கிறது.

"இறங்கலாமா?" - என்று கேட்டு இறங்கி பூசாரி வீட்டை நோக்கி நடக்கின்றனர்.

"இப்ப எங்க போறோம்?"

"கோயில் பூசாரி வீட்டுக்கு..."

"அங்க எதுக்கு?"

"அவர்தானே உங்களை கூட்டிக்கிட்டு வரச் சொன்னவரே?"

"அதோ தெரியுதே அதானே முனியன் குன்று...?"

- கூமாச்சிமலையின் நடுவில் பழுப்பு தட்டி நிற்கும் குன்றைக்காட்டி சரியாகக் கேட்கிறாள் ராஜலட்சுமி.

"ஏன் நீங்க இதுக்கு முந்தி வந்ததில்லையா?"

"வந்துருக்கேன் ரொம்ப வருஷம் முந்தி... இப்ப சரியா ஞாபகம் இல்லை..."

"இது பொன்விளைந்த பட்டிதானே?"

"அதேதான். எப்ப பொன்விளைஞ்சிச்சோ தெரியல. பேர் வெச்சுட்டாங்க பெரிசா..."

"இந்த ஊர் பத்தி அப்பா நிறைய தன் டயரில எழுதி வெச்சிருக்கார்..."

"அப்பாவா?"

"ஆமாம். எங்கப்பா ஜமீன்தார் தானுலிங்க பூபதியை சொன்னோம். நீ யாரைன்னு நினைச்சே?"

"அந்த டயரி இருக்கா என்ன?"

"அவரோட ஒரே சொத்தா எங்ககிட்ட இப்ப இருக்கறதே அதுதானே?"

"இதைச் சொல்லவேயில்லையே நீங்க.."

"எதுக்கு சொல்லணும்? ஏன் சொல்லணும்?"

"இல்ல- இல்ல, சும்மா கேட்டேன்."

- பேசி முடிக்கவில்லை. பூசாரியின் குடிசை வந்து விட்டது. உள்ளிருந்து எட்டிப் பார்க்கிறாள் விந்தியா.

சம்பா, ராஜலட்சுமி இருவரையும் பார்த்து கை கூப்புகிறாள். பின்னாலேயே பூசாரியும் வருகிறார்.

"வாங்கம்மா.. வாங்க.. வாங்க.."

"இவர்தான் பூசாரி கொண்டையன்."

"நமஸ்காரம் சாமி எங்களை வரச் சொன்னதா தம்பி வந்து சொன்னிச்சு. எங்க சந்தோஷத்துககு ஒரு அளவே இல்லைங்க.."

"ஆமாம்மா- அந்த முனீஸ்வரன் நினைப்பு யாரறி வாங்க. சொல்லுங்க பார்ப்போம். உக்காருங்க. என்ன சாப்பிட்டீங்க.."

"உபவாசம் இருக்கோம். பச்ச தண்ணிகூட வேண்டாம். எப்ப மலைக்கு கிளம்பறோம்?"

"பகல் பொழுதுல இல்லம்மா. ராத்திரி சாம பலி பூசைக்கு நான் போவேன். அப்ப ஊர் எல்லைல உள்ள கருவேலங்காட்டுல வந்து என்னோட சேர்ந்துக்குங்க.."



"ராத்திரியிலையா?"

"ஆமாம்மா.. அப்ப வரச்சொல்லித்தான் சாமி உத்தரவு-"

- பூசாரி நறுக்கென்று பதில் சொல்லிவிட்டு திரும்பினால் விந்தியா இளங்கோ இருவரையுமே காண வில்லை!

எங்கே?

"பெரிய ஆள்தான் நீ.." - விந்தியாவைப் பாராட்டி கொண்டிருக்கிறான் இளங்கோவன். இடம் ஆற்றங் கரை!

"எதுக்கு?"

"ஒரு பொம்பளைக்கு இந்த நெஞ்சழுத்தம் ஆகா தும்மா.."

"எல்லாம் என் கடமை - அதுக்கு மேல என்ன சொல்ல?"

"எப்படி இந்த பூசாரி சம்மதிச்சான். சந்தேகப் படலையா?"

"நிறைய சந்தேகத்தோடதான் விட்டு வெச் சிருக்கான். ஒரு வகைல தன் சந்தேகத்தை தீர்த்துக்கதான் என்னை விட்டு வச்சிருக்கான்னுகூட சொல்லலாம்.."

"நீ போலீஸ்னு தெரியாதா?

"தெரியாது.. ஆனா முனியன் குன்றைப் பத்தி ஆராய வந்தவ. முனீஸ்வரனை பத்தி கட்டுரை எழுத வந்தவன்னு நம்பறான்."

"என்னைப் பத்தி ஏதாவது சொன்னானா?"

"இல்ல- என் வரைல ரொம்ப சின்சியர் பூசாரி அவன். திருட்டுத்தனமா ஒரு விஷயம் இல்ல அவன் கிட்ட"

"ரொம்ப ஆச்சரியமா இருக்கு ஒருவேளை நீ நம்பணும்கறதுக்காக நடிச்சகிட்டு இருக்கானோ?"

"இருக்கலாம்."

"நீ மலைக்கு போய் ஒளியலையா?"

"இல்ல. எனக்கு என் சுபீரியர்ஸ் கிட்ட இருந்து வார்னிங்க இருக்கு. கிரவுண்ட்ல இருந்து இன் வெஸ்டிகேட் பண்ணி மேட்டர் பாஸ் பண்ணா போதும் கறாங்க.."

"இந்த ஊர் எப்படி?"

"எல்லாரும் முட்டாள் ஜனங்க. முனீசுவரன் பேர் சொல்லி ஒருத்தன் பொண்டாட்டியைக் கேட்டா அனுப்பி வெச்சிடுவாங்க. அவ்வளவு நம்பிக்கை."

"மொத்தத்துல உன் அபிப்ராயம்?"

"ரொம்ப குழப்பமா இருக்கு. என்னால எதையும் கண்டுபிடிக்க முடியலை. இந்த நிமிஷம்.."

"அப்ப ரொம்ப எச்சரிக்கையா இருக்காங்கன்னு தெரியுது.."-

"ஆமாம்."

"ஒருவேளை நிஜமாலுமே மாலைல ஒண்ணும் இல்லையோ - நாமதான் பகுத்தறிவோட உபத்ரவத்தால கண்டத நினைச்சுக்கறோமோ.."

"அப்படியும் இருக்கலாம்.."



"எல்லாத்துக்கும் இப்படி பதில் சொன்னா எப்பபடிம்மா. நீ ஒரு போலீஸ். நான் ஒரு சாதாரண பத்திரிகையாளன். என்னைவிட அட்வான்ஸா பல விஷயங்களை தெரிஞ்சு வெச்சிக்க வேண்டாமா?"

"நான் என்ன பண்ணட்டும்.. என் போலீஸ் அதிகாரி நூறுதடவை சொல்லி அனுப்பி...ருக்காரு... சாமி விஷயத்துல விளையாடாதே.. விளையாடாதேன்னு.."

"அப்ப எதுக்கு அனுப்பினாராம்?"

"மேலிடத்து பிரஷர் காரணமாம். உங்களை மாதிரி பத்திரிகைக்காரங்க காரணமாம்."

"ஐ.சி... அப்ப உங்க அதிகாரி ஒரு முனீஸ்வர பக்தர்னு சொல்லு.."

"ஹன்ட்ரட் பர்சன்ட்!"

"தேங்க்ஸ்மா... இப்பதான் இருண்ட அறைல எனக்கு ஒரு ஜன்னல் திறந்துருக்கு. இப்போதைக்கு இது போதும். போகப்போக பாக்கறேன்."

"என்ன இது... என்வென்னமோ சொல்றீங்க - இருண்ட அறை ஜன்னல்னு.."

"புரியலியா.. நல்லது.. ஆமா. படிச்சு பாஸ் பண்ணி போலீஸ் சேர்ந்தியா... இல்ல லஞ்சத்தாலையா?"

- இளங்கோவனின் கிண்டலை ரசிக்கிறாள் அவள். பதில் சொல்லாமல் சிரிக்கிறாள். ரொம்பவும் வசீகரிக்கிறது அது. அவனும் சற்று இறங்குகிறான்.

"போலீஸ்ல லட்சணமா ஒரு பொம்பளை இருக்க மாட்டான்னு நினைச்சேன். நீ இருக்கே. ஐ திங்க் உன்

உருவத்துக்காக உன்னை தூக்கி போட்டுருப்பாங்க அங்கே யும் இதே மாதிரி சிரிச்சியா?"

அவளிடம் தொடர்ச்சியான தலையசைப்பு.

அதனுள் பல ஆயிரம் அர்த்தங்கள்.

அவனுக்கு குழம்புகிறது.

"ஆமாம்- அந்த பெண்களோட நீங்களும் ராத்திரி மலைக்கு போறீங்களா?"

"கட்டாயமா- நீயும் வரியா-"

"அவசியம் வரணுமா?"

"வேண்டாம். நல்லா படுத்துத் தூங்கு. அதுக்கு தானே சம்பளம் தராங்க."

-எரிச்சல் பீறிட முகம் தூங்குகிறான் இளங்கோவன்.

"கோபமா?"

"—"

"ஓ. கே. ஓ. கே... நானும் வரேன்... ஆனா உங்க ளோட சேர்ந்து இல்ல..."

"வேற எப்படி?"

"மேல் பாத்து தெரிஞ்சுக்குங்களேன்..."

- பொடி வைக்கிறாள் அந்த புன்னகை மயில். சிண்டைப் பிய்த்துக் கொள்கிறான் இளங்கோவன்.

# 8

**'பொன்னழகி!'**

**என் ஆசை நாயகி. தெரியாத்தனமாய் இறைவன். இவளை தாசி குலத்தில் பிறக்கவைத்து விட்டான். இவளது குலமே நான் இவளை பட்டமகிஷியாக்கிக் கொள்ள தடையாக இருக்கிறது. இருந்தாலும் இவளும் என் மனைவிதான். இவளது மக்கள் என் வாரிசுகளே!"**

**— ஜமீன்தாரின் டயரியிலிருந்து**

இரவுப்பொழுது!

குளித்து முடித்து ஈரம் சொட்ட பூசாரி ஆற்றில் இருந்து நடந்துவர ஊரே காலில் விழுந்து கும்பிடுகிறது.

தெற்குத் தெரு முக்கில் இருக்கிறது அங்காளம்மன் சன்னதி. அதன் பூசாரி ஈரமாய் வந்து நிற்கும் கொண்ட யன் பூசாரிக்கு பிசிண்டியையும், சங்கையும் எடுத்துத் தருகிறார்.

பூம்... பூம்... சங்கு முழங்குகிறது.

டாண்... டாண்... - சிகண்டி அலறுகிறது.

"சாமி இன்னிக்கு என் ஆடு..." - ஒருவன் பூசாரி முன் ஒரு ஆட்டை கொண்டு வந்து நிறுத்தி அலரிப் பூமாலையைப் போடுகிறான். பூசாரி அதன் முன்சென்று அதை உற்றுப் பார்த்துபின் கோயில் விபூதியையும் குங்குமத்தை கேட்டுவாங்கி முனீஸ்வரா என்று முணு முணுத்தபடி அதன்மேல் தூவுகிறார்.

அது மந்திரித்ததுபோல அவர் பின் நடையிடத் தொடங்குகிறது. வானத்திலிருந்து நிலவுப் பார்வை.

பூசாரி ஆட்டுடன் நடையைத் தொடர, பார்ப்பவர்கள் காலில் விழுந்து எழுந்திரிக்கின்றனர்.

ஊர் எல்லைவரை இந்த கும்பிடு சமாச்சாரங்கள் தொடர்கின்றன. கருவேல மரக்காடு வரவும் அதன் மண் பாதையில் நுழைந்து நடக்கிறார் பூசாரி.

நடுபாதையிலேயே கும்பிட்ட கையோடும், ஈர உடலோடும் ராஜலட்சுமியும், சம்பாவும் ஒரு ஓரமாக நின்று கொண்டிருக்கிறான் இளங்கோவன்.

அவனைப் பார்க்கும் பூசாரி சற்று இளக்காரமாகச் சிரிக்கிறார். எதுவும் பேசாமல் சைகை காட்டியபடி நடக்கிறார். மூவரும் பின்தொடருகின்றார்கள்.

சாம்பல் தட்டிய மலைப்பாதையில் கரடு முரடான வளைவில் கஷ்டப்பட்டு நடக்கின்றனர். ஓரிடத்தில் பூசாரி தீப்பந்தம் ஒன்றை எடுத்துக்கொள்கிறார். ஆனால் எங்கேயும் பூசாரி சப்தத்தை நிறுத்தவில்லை.

சுற்றிச் சுற்றி பார்க்கிறான். பூச்சிகள் பறந்து கொண்டிருக்க - இடுப்புயரக் காட்டுச் செடிகள் உரச, சற்று உடம்பெல்லாம் அரிக்கிறது.

இரண்டொரு தினம் முன்னால் வந்த பாதை வேறாக இருக்கிறது. இன்று வேறு பாதை! நீண்ட நடைக்குப் பின் புளிய மரம் தெரிகிறது!

குதிரை கனைப்பு சப்தம் கேட்கிறது.

கோயிலில் மங்கலான வெளிச்சம் படிந்திருக்கிறது.

சம்பாவும் ராஜலட்சுமியும் "முனீஸ்வரா!" என்று மிகவே உணர்ச்சி வசப்படுகின்றனர்.

கோபுரம் தாங்கிய கோயில் தளத்தை எட்டி தீப்பந்தமுடன் நடந்து முன்செல்லும் பூசாரி பலிபீடம்



அருகே போய் நின்று சங்கையும், சிகண்டியையும் கீழே வைத்து விட்டு ஒரு கும்பிடு போடுகிறார்.

தீப்பந்தத்தை இளங்கோவன் பிடித்துக் கொள்கிறான்.

எதிரில் முட்டை முனீசுவரன் உருவம் தெரிகிறது. ராஜலட்சுமியும், சம்பாவும் அதைப் பார்த்துவிட்டு "சாமி.." - என்று முன் ஓடுகின்றனர். அப்படியே மண்டியிட்டு கீழே விழுகின்றனர்.

பூசாரி தன் காரியத்தில் கண்ணாக இருக்கிறார்.

ஆட்டை வெட்டி பலி கொடுத்து முடித்து - விளக்கேற்றி கற்பூர தீபம் காட்டி முடித்து உள்ளிருக்கும் நகராவையும் எடுத்து முழக்கமிட்டுவிட்டு கீழே விழுந்து கும்பிடுகிறார். பின் மூவர் பக்கமும் திரும்புகிறார்.

"தாயிங்களா, நீங்க இரண்டு பேர் வடதிசை கால் வெச்சு தென்திசை தலைவைச்சு மரத்தடியில் படுத்து உறங்குங்க. தம்பி, நீ கிழக்க தலைவெச்சு படுத்தா படு- இல்லாட்டா முழிச்சுகிட்டும் இரு. இது முனி உத்தரவு- இனி அதும் பாடு - உங்க பாடு. நான் வரேன்.." - சொல்லிவிட்டு திரும்ப ஒரு கும்பிடு போட்டுவிட்டு நடக்கிறார். போகும் போதும் சங்கு முழக்கம். சிகண்டி சப்தப் நெடுந்தூரம் அவர் போய் அடிவாரம் இறங்கும் வரை அது கேட்டுக்கொண்டே இருக்கிறது.

சம்பாவும் ராஜலட்சுமியும் முனீசுவரனின் சந்நிதி முன் அமர்ந்து பிரார்த்தனை செய்தபடி இருக்கிறார்கள்.

இளங்கோவன் சுற்றிச் சுற்றி பார்க்கிறான். தன் தேடலில் விசேஷமாக ஏதாவது அகப்படாதா என்கிற எதிர்பார்ப்பு. முனிசாமி சன்னதியையும் சுற்றியுள்ள இருளையும் ஊடுருவி அலசுகிறான்.

முனுசாமி வாளுடன் ஜம்மென்று அமர்ந்திருக்கிறது.

கதையாலான பத்தடி உயர சாமி. வண்ணம் பூசப்பட்டு மாலை சூட்டப்பட்டு வீரம் மின்ன அமர்ந்திருக்கிறது.

வெளியே வருகிறான்.

அகண்ட கிளைகளோடு கூடிய புளிய மரம். நல்ல அடர்த்தி. சுற்றிலும் சுமாராய் ஒரு ஏக்கர் அளவிற்கு சமதிலப்பரப்பு. அதன்பின் சரிவு. சரிவில் காட்டுச் செடி கொடிகள்.

மற்றபடி எங்கும் யாரும் தங்கியிருக்க ஒருசின்னக் குடிசைகூட இல்லை. ஆனால் எட்டி நடந்தால் எலுமிச்சை, நெல்லி, ஜாதிக்காய், மாசிக்காய் பொறுக்கி வரலாம். போகப் போக அந்த மாதிரி மரங்கள் மிக உண்டு என்று சிலர் சொன்னதுநினைவில் பெருகி அடங்குகிறது.

"போய்ப் பார்த்து வரலாமா?

கேள்வி எழும்புகிறது. போய்ப் பார்த்து வருவது என்று முடிவும் செய்து கிளம்புகிறான்.

அந்த இரண்டு பெண்களும் தீவிரமான பிரார்த்தனையில் இருக்கின்றனர். இவர்கள் இப்படியே இருக்கட்டும். நாம் போய் வருவோம்.

கிளம்புகின்றான்.

பென்டார்ச் வழி காட்டுகிறது.

ஒற்றையடிப் பாதை வளைந்து வளைந்து போகிறது.

டார்ச் லைட்டை அடித்தபடியே நடக்கிறான்.



சின் வண்டு சப்தம். சில்லென்ற காற்று. லேசான குளிர். பார்வையில் துழாவலோடு நடக்கிறான்.

ஓரிடத்தில் நெருப்பெரிவது தெரிகிறது.

ஆளுயர தீஜ்வாலை. ஆனால் முனியன் குன்றிவில்லை. கூமாச்சி மலை அடிவாரச் சறுக்கத்தில் தெரிகிறது அந்த நெருப்பு காட்டுத்தீயா? இல்லை மனிதர்கள் யாராவது சாராயம் காய்ச்சுகின்றார்களா?

பாக்கெட்டை தொட்டுப் பார்க்கிறான். சின்ன கேமிரா இருக்கிறேன் என்கிறது. அந்த எரியும் நெருப்புப் பக்கமாக நடக்கத் தொடங்குகிறான். சரியான பாதை இல்லை. குண்டும் குழியுமாக காலை இடறுகின்றன. போக முடியுமா?

சந்தேகமாக இருக்கிறது.

தயக்கம் வந்து காலைப் பிடித்து நிறுத்தும்போது குதிரை ஒன்றின் கனைப்புச் சப்தம் - சப்தம் வந்த திக்குப் பக்கம் பார்வை திரும்ப, வாலைக் குழைத்தபடி குதிரை உச்சிப் பகுதி மேல் நின்று கொண்டிருக்கிறது. பௌர்ணமி நிலவொளியில் பார்க்க பரவசமாக இருக்கிறது.

அன்று பார்த்த அதே குதிரை–

இளங்கோவன் சற்று பயந்தாலும் குதிரையை பார்த்த சுவாரஸ்யததை முகத்தில் காட்டி.. அதை நோக்கி ஓடத் தொடங்குகிறான். அவன் வரவும் குதிரை வேறு பாதையில் ஓடத் தொடங்குகிறது. முன்னிரண்டு காலை உயர்த்தி சாகசம் செய்து கொண்டே ஓடுகிறது.

பின் தொடர்கிறான். இல்லையில்லை துணிவோடு துரத்துகிறான்.

அது நெருப்பெரியும் அந்த கூமாச்சி மலையின் அடிவாரப் பக்கமாக ஓடுகிறது.

நெருங்க நெருங்க மனிதக் குரல்கள் 'அப்படி ஓடு இப்படி ஓடு' என்று கத்திக்கொண்டு ஓடுவது கேட்கிறது.

காய்ந்த சப்பாத்திக் கள்ளி வரிசைக்கு தீ வைத்திருக்கின்றார்கள். அது வரிசை பிடித்து உச்சிவரை ஏறிப் போகிறது.

இளங்கோவன் சற்று குழம்பிப் போகிறான். தீ வெளிச்சத்தில் ஒருவன் ஓடுவதைப் பார்க்க முடிகிறது. திறந்த மார்பும் லுங்கியுமாக இருக்கிறான் அவன்.

பாறைக்குப் பாறை தாவி ஓடுகிறான்.

'முனீஸ்வரா எங்கள ஒண்ணும் பண்ணிடாதே!' என்று கூக்குரல்கள் அங்கும் இங்குமாக ஒலிக்க, அதுவரை ஓடிவந்த குதிரை தீப்பிடித்து எரியும் கள்ளி வரிசை அருகில் ஒரு பாறைமேல் கால் வைத்தபடி நின்று அனைவரையும் பார்க்கிறது.

அபூர்வ காட்சிபோல் அதன் முதுகின் மேல் இப்பொழுது ஒருவன். கையில் வாளோடு...

தீப்பிடித்து எரியும் அந்த கள்ளிச் செடி ஓரமாகவே அவன் குதிரையை செலுத்துகிறான். மலைச்சரிவு. இருந்தும் குதிரை வேகக் குறைவின்றி மேலேறுகிறது.

பார்த்துக்கொண்டே நிற்கிறான் இளங்கோவன்.

ஆங்கிலப் படத்தில் வரும் காட்சிபோல இருக்கிறது. மின்னல் வேகம் கண்ணைப் பறிக்கும் சாகசம்.

பார்த்துக்கொண்டே நிற்கும் அந்த நொடிப் பொழுதில் ஒருவன் அந்த குதிரை மனிதனின் கையில்



அகப்பட, அவனது வாள் அவன் கழுத்துப் பக்கம் வீசப்படுகிறது.

வெள்ளப்பட்ட தலை ஒரு உதை பந்தாட்டம் வானம் எழும்பி இளங்கோவன் நிற்கும் இடத்திற்கு சற்று தள்ளி வந்து விழுகிறது.

'ஐயோ! பதைப்பில் ரத்தம் சுண்டிப்போக, உடம்பு சிலையாக, அந்த குதிரை மனிதன் அடுத்து ஓடி ஒளிந்த இன்னொருவனையும் அதே போல வாளைக் கொண்டு வளைத்துப் பிடித்து வெட்ட, தீஜ்வாலைக்கு நடுவே தெளிவாக தெரிகிறது காட்சி. காமிராவை எடுத்து போட்டோ பிடிக்கக் கூட தோன்றவில்லை. அந்த அளவு வேகமாகவும் கோரமாகவும் இருந்து மனதை பாதித்து விட்டது அந்த காட்சி.

பார்த்துக்கொண்டேயிருக்கும்போதே குதிரை மனிதன் தொடர்ந்து மேலேறுகிறான்.

தீ எரியும் இடம்விட்டு விலகி வெண்ணிலவின் ஒளியில் லாகவம் குறையாதபடி பயணித்து மறுபாகச் சரிவில் இறங்கி மறைந்தும் போகின்றான்.

"முனீசுவரா-

முனீசுவரா..." - என்று தேய்ந்து ஒலிக்கும் குரல்கள் அங்கங்கே ஒலித்து அடங்க இளங்கோவன் தன்னருகே தேங்காய்போல் உருண்டு விழுந்து கிடக்கும் தலைப் பகுதியை நோக்கி நடக்கிறான்.

டார்ச் ஒளியில் பார்க்கிறான்.

கண்கள் திறந்தநிலையில் இளங்கோவனை பார்க்கிறது. அந்த முண்டப் பகுதி கோரமாக இருக்கிறது.

குனித்த வேகத்தில் நிமிர்ந்து தூரச் செல்கிறான்.

"முனுசாமி இனி இந்த கூமாச்சி மலைப்பக்கம்கூட வரமாட்டோம்யா. ஒத்த மரத்தை கரிக்குன்னும், விறகுக் குன்னும்கூட தொடமாட்டோம். உன் வார்த்தையை மீறிட்டோம், மன்னிச்சிடுய்யா... மன்னிச்சிடுய்யா..."

- எங்கோ ஒரு பெண் குரல் ஒலிப்பது துல்லியமாக காதில் வந்து சேர்கிறது.

அப்படியானால் தான் பார்த்ததுதான் முனுசாமியா?

அது இப்பொழுது நிகழ்த்திய வேட்டை மரம் வெட்டிகள் மீதா?

ஆச்சரியம் பிடுங்குகிறது. திரும்ப குதிரை கனைக்கும் சப்தம். அது வரும் திக்கைப் பார்க்க ஒரு குதிரை ஓடி வந்து கொண்டிருக்கிறது. சரியாக இளங்கோவனை நோக்கி.

இளங்கோவன் பதிலுக்கு பயந்து அங்கிருந்து ஓடத் தொடங்குகிறான். பின்னாலாயே அதன் துரத்தல்...

விடாதுபோல இருக்கிறது. இளங்கோவனும் முடிந்த அளவு வேகம் எடுத்து ஓடுகிறான். ஓட்டம் முனுசாமி கோயிலை ஒட்டித்தான் முடிகிறது.

திரும்பிப் பார்த்தால் அதுவரை துரத்திய குதிரையைக் காணவில்லை. பெருமூச்செறிகின்றது.

ஓடிவந்து நிற்கும் இடத்தில் சம்பாவும், ராஜலட்சுமியும் இன்னமும் கண் திறக்காதபடி தியானத்தில் உட்கார்ந்திருக்கின்றனர்.

'சரிதான், இது அசுர பக்தி போலும்!' - இளங்கோ தீர்மானித்து பெருமூச்சை சிறுமூச்சாக ஆக்கிக் கொள்



கிறான்.

வெட்டிப் போடப்பட்ட ஆட்டுடம்பை காணவில்லை.

அவர்களும் அமைதியாக தியானத்தில் மூழ்கி இருக்கின்றனர்.

"மேடம்... மேடம்..." கிசுகிசுப்பாக குரல் கொடுத்து கலைக்கிறான்.

-அவர்க்ள கண் திறக்கிறார்கள்.

"படுக்கலையா... நீ?"

"நானும் படுக்கணும். உங்களுக்கொண்ணும் பயமா இல்லைஅய..."

"பயமா... எங்களுக்கா?"

"ஆமாம்... இப்ப இந்த மலைக் குன்றுல நாம மூணு பேர் மட்டும்தான் இருக்கோம்."

"நாலு பேர்ப்பா..."

"நாலு பேரா... யார் அது இன்னொருத்தர்?"

"முனீஸ்வரனை விட்டுட்டியேப்பா..."

"ஓ... ஆமாம்! ஆமாம்..."

"எதனால உனக்கு இப்படி வியர்த்திருக்கு?"

"வியர்வையா... அது... அது?"

"உனக்குத்தான் பயமா இருக்குபோல. அவனை நம்பு... பார்... எப்படி உட்கார்ந்துருக்கான்?"

- ராஜலட்சுமி எதிரில் கைகாட்டி திரும்பக் கும்பிடுகிறான்.

இப்படிக்கூட ஒரு பக்தி இருக்க முடியுமா என்ன?
இப்படிக்கூட ஒரு பக்தி இருக்க முடியுமா என்ன?
மீள்கிறது இளங்கோவன் மனது சற்றுமுன் பார்த்த
காட்சிகள் பறந்து வந்துவிழுந்த மனிதத்தலை எல்லாம்
மனதில் இடவலமாக புரண்டு கொண்டேயிருக்கின்றன.

போய் அப்படியே பூசாரி சொல்லிச் சென்றது
போல கிழக்கு பக்கமாக தலைவைத்து புளிய மரத்தின்
வேர்த்தண்டில் படுக்கிறான்.

சம்பாவும், ராஜலட்சுமியும்கூட வந்து பூசாரி
சொன்னதுபோல வடக்கு பக்கமாக கால்வைத்துப்
படுத்துக்கொள்கின்றனர்.

சன்னதி அகலும், தீப்பந்தமும் தரும் வெளிச்சம்
போதுமானதாக இல்லை. அதைப் பற்றி அந்த இரண்டு
பெண்களிடமும் எந்த கவலையும் இருப்பதுபோல்
தெரியவில்லை.

இவர்களே கவலையின்றி பயமுமின்றி இருக்கும்
போது தான் மட்டும் கவலைப்படுவதும் பயப்படுவதும்
சரியில்லையே? மண் தரையில் புரண்டு படுத்தபடியே
யோசிக்கிறான்.

புளியங்கிளைகளின் ஊடே நிலாவின் ரசமான
ஒளிக் கற்றைகள் தெரிந்தும் தெரியாமல் கண்ணாமூச்சி
விளையாட அந்த வினாடிக்கு அது மட்டுமே கூட
ரசனைக்குரியதாக இருக்கிறது. திடுமென்று சில்லென்ற
காற்றில் ஏதோ ஒரு வாசம்புகுந்து நாசியை கமகமக்க
வைக்கிறது.

கிறுகிறுப்பாய் இருக்கிறது.

சில வினாடிகள்தான்.

மயக்கம் கண்களை மூட வைக்கிறது!



# 9

'எனது சிறையனுபவம் மிகக் கொடியது. அம்ச
தூளிகா மஞ்சத்தில் படுத்து அரைத்த சந்தனம் பூசி,
நுரைத்த பாலை குடித்த நான் சிறையில் கொட்டை
யரிசிச் சாதம் சாப்பிட்டு சீரழிந்தேன்.

என் பரம்பரையே சிறையைப் பார்த்தது கிடை
யாது. ஒரு ஜமீன் பிரதிநிதி என்று விசேஷ வகுப்புக்
கூட எனக்கு தரவில்லை. உடைந்த சட்டியை தந்து
அதில் மலங்கழிக்கச் செய்தார்கள் - இதற்கெல்லாம்
இந்த அரசாங்கத்தை பழிவாங்கினால்தான் என்
ஆத்திரம் அடங்கும்...'

- ஜமீன்தாரின் டயரியிலிருந்து

விடிகிறது!

பட்சி ஜாலங்கள் காதில் பாய்கின்றன.

மல்லின் துணியை போர்த்தினதுபோல பனியின்
விரிப்பு.

புரண்டு படுக்கும்போத விழிப்பு தட்டி எழுந்து
அமர்கிறான் இளங்கோவன்.

'இப்படிக்கூடவா தூங்கிப்போக முடியும்?' கண்
களை கசக்கியபடி தனக்குத் தானே கேட்டுக் கொள்
கிறான். உடம்பெல்லாம் வலிக்கிறது- மூச்சு ஒரு வகை
வாசம் திரடியது வரை ஞாபகத்தில் இருக்கிறது. அதன்
பின்...?

கூமாச்சி மலை அடிவாரத்தில் தீப்பிழம்பு தெரிந்
ததும் - தேடிப் போனதும் குதிரை மேல் ஒருவனைப்

பார்த்ததும் அவனை சிலர் 'முனீசுவரா - முனீசுவரா...' என்றதும் நினைவில் கிளர்ந்தெழுகிறது.

ஒரு தலைகூட பறந்து வந்து காலடியில் விழுந்ததே...

பகீர் என்கிறது உணர்வு.

கண்களைக் கசக்கியபடி திரும்பிப் பார்க்கிறான்.

அந்த பெண்கள் இரண்டு பேரும் படுத்திருக்க அவர்களை மணலால் மூடியதுபோல பொற்காசுகள் மூடியிருக்கின்றன.

அது தங்களை மூடியது தெரியாதபடி அயர்ந்து அவர்களும் உறங்குகின்றனர். பக்கத்திலேயே இரண்டு தவலைகள்!

ஒரு கணம் இளங்கோவனுக்கு நெஞ்சையடைக்கிறது. கண்ணைப் பறிக்கிறது. வேகமாக சென்று குனிந்து அந்த காசுகளை கைகளில் அள்ளுகிறான். அப்படியே அண்ணாந்து மேலே பார்க்கிறான் புளிய மரக்கிளை.

கைகளில் பொற்காசுகள் மின்னுகின்றன. காலை இளவெளிச்சத்தில் கண்ணைப் பறிக்கின்றன.

அவ்வளவும் தங்கம்தானா?

இவ்வளவும் இவர்களுக்கா...?

அவன் தவித்து தடுமாறி காசை அள்ளும்போதே அவர்களுக்கும்விழிப்பு தட்டுகிறது.

எழுந்த வேகத்தில் சேலை முந்தி முதல் தலைமுடி வரை சிதறிவிழும் பொன் நாணயங்களைப் பார்த்து பிரமித்துப் போகின்றனர்.

"என்ன இது... எங்க மேலயா இந்த காசெல்லாம்..."



"ஆமாம். நானும் இப்பதான் எழுந்து பார்த்தேன். உங்க மேலதான் இவ்வளவு காசும் மழையா விழுந்து கிடந்துச்சு. எனக்கு ஒண்ணும் புரியல..."

"எங்களுக்கும்தான்... முனீசுவரா என்ன இதெல்லாம்?"

- அவர்கள் இருவரும் சன்னதி நோக்கிச் சென்றனர். சன்னதியில் வழக்கம்போல கம்பீரமாக முனீசுவரன் விளக்கெரியும் இடத்திற்கு பக்கமாக வெளிச்சம் படும் சுவரில் செய்தி...

'ஜமீன் பிரதிநிதிகளே உங்களுக்காகவே பொன் மழை பொழிந்தேன். இந்த தங்க நாணயங்கள் உங்கள் வறுமையைப் போக்கட்டும். அரசு செய்யத் தவறியதை நான் செய்தேன்.

இது என் வனம்.

இங்கே ஒரு புல்லைப் பிடுங்குவது கூட பாவம்.

எனவேதான் மரம் திருடும் கும்பலையும் வெட்டிப் பந்தாடினேன். நீங்கள் இதுபற்றி பிரஸ்தாபிக்காமல் வந்தவழியே கிளம்புங்கள்.

இளங்கோவா... உனக்கு இன்று இரவு நான் நேரில் தரிசனம் தருவேன் - நீ மட்டும் வா!'

- காளாமுனி-

- சுவர்ச் செய்தி அந்த இரண்டு பெண்களின் கண்களையும் வைரச்சுடர் ஆக்குகிறது.

"முனீசுவரா... முனீசுவரா..." என்று மாறி மாற கன்னத்தில் போட்டுக் கொண்டு கீழே விழுந்து எழு திருக்கின்றனர்.

பிரமைபிடித்ததுபோல பார்த்துக் கொண்டிருக்கிறான் இளங்கோவன். 'ஒரு கடவுள் இப்படிக்கூடவா நேரில் வந்து படியளக்கும்.' - புரியாத புதிராக குழப்பமாக மலைப்பாக இருக்கிறது.

அவர்கள் காசுகளை தங்கள் புடவை முந்தியில் அள்ளுகின்றனர். ஒரு கூடை தாண்டுமளவு நாணயம். அள்ள அள்ள உருண்டு ஓடுகிறது. மாய்ந்து மாய்ந்து புளியம்பழம்போல பொறுக்குகின்றனர். அள்ளிய நாணயங்களை தவலையில் கொட்டி தண்ணீர் குடம் தூக்குவதுபோல தூக்குகின்றனர். பார்த்துக்கொண்டே நிற்கிறான் இளங்கோவன்!

பூசாரியின் வீட்டுக்குள் நுழையும்பொழுது 'குட் மார்னிங்' என்கிறாள் விந்தியா.

நிமிர்ந்து பார்க்கிறான்.

குழப்பம் பரவியிருக்கும் முகத்தை கச்சிதமாகப் படிக்கிறாள்.

"என்ன முனுசாமி ரொம்ப குழப்பிடிச்சா?"

"........"

"இப்படி பார்த்தா எப்படி? ஆமா எங்க அந்த இரண்டு பேர்?"

"அங்க இரண்டு பேரும் போயிட்டாங்க!"

"எங்க..?"

"முதல் பஸ்சுல ஊருக்கு..."

"ஐசி... அவங்களுக்கு என்ன கொடுத்துச்சு முனுசாமி..." - விந்தியாவை விருட்டென்று பார்க்கிறான்-

"அது-- அது--"



"தங்கக் காசுங்கதானே?"

"ஆமாம்-- உனக்கெப்படி தெரியும்?"

"அதை அவங்க என்ன பண்ணப் போறாங்களாம்..."

"என் கேள்விக்கு பதில் சொல்லு. உனக்கெப்படி தெரியும்?"

- அவள் அதற்கு பதில் சொல்லாமல் சிரிக்கிறாள். பின் அந்த வீட்டின் நெற்குதிர் போன்ற ஒன்றில் கைவிட்டு ஒரு சின்ன பித்தளை பானையை வெளியே எடுக்கிறாள்.

"இந்த பானை... இது நிறைய காசை ஏற்கனவே சாமி பூசாரிக்கு கொடுத்திடுச்சு. அது யாரையாவது மலைக்கு கூட்டிட்டாலே இப்படி கொட்டிக் கொடுக்கத்தான்னு எனக்குத் தெரியும்..."

"பூசாரி இப்ப எங்க?"

"ஆத்துக்கு குளிக்கப் போயிருக்கார். பயப்படாதீங்க. இதை அவரே எனக்கு காட்டியிருக்கார். இது முனீசுவரன் கருணையாம். நான் நம்பினா எனக்கும் கட்டாயம் கிடைக்குமாம். சொல்லியிருக்கார்..."

"எனக்கு ஒரே குழப்பமா இருக்கு விந்தியா. ராத்திரி நான் முடிஞ்ச வரை ட்ரை பண்ணினேன். சாமியை பார்க்க முடியலை.

ஆனா அது குதிரைல போனதை, சில மரம் வெட்டிகளை வெட்டிக் கொன்னதை பார்த்தேன். ஒரு தலை என்கிட்ட கூட வந்து விழுந்தது."

"உங்களுக்கு இவ்வளவுதானே தெரியும். எனக்கு இதுக்கு மேல விஷயங்கள் தெரியும். சொல்லவா?"

"என்ன?"

"இந்த மலைச்சரகம் விசேஷமான மரங்களை உடையது. இங்க சாராயம் காய்ச்சப்பட்டது. மூலிகை திருடப்பட்டது விலையுள்ள மரங்கள் வெட்டப்பட்டன. தென்மேற்கு பருவக்காற்று கேரள எல்லை வந்து உள்ளே நுழையற முகத்துவார பகுதி இது. அப்படி நுழையும் போது இந்த மலை மரங்கள் மேல பட்டு ரொம்ப தூய்மையாகி தென் தமிழ்நாடு பூரா பரவும். கிட்டத் தட்ட இந்த இடம் ஒரு ஃபில்டர் பகுதி.

அரசாங்கத்துக்கே இந்த விஷயம் பல ஆராய்ச்சிக்கு பிறகு இப்பதான் தெரியும். இப்படிப்பட்ட இந்த மலைல களவும்திருடும் ரொம்ப சாதாரணம்.

ஏன்னா பச்சைக் கூமாச்சி மலை ஒரு பயங்கர மலைப் பகுதி. ஒரு முறை விமானம் ஒண்ணு பனி மூட்டத்துல இந்த மலைல மோதி சுக்கு நூறாகி விழுந்துருக்கு. இன்னமும் அதன் பல பாகங்களை மீட்க முடியல. அப்படிப்பட்ட அடர்ந்த காட்டுப் பகுதி. விலங்குகளும் அதிகம்.

திருடர்களுக்கு கைவரிசையைக் காட்ட ரொம்ப ஏற்ற இடம். ஆனா முனீசுவரசாமி விஸ்வரூபம் எடுத்து திரிய ஆரம்பிச்சதுல இருந்து கிட்டத்தட்ட அந்த மாதிரி தப்புகள் நடக்கறதே இல்லை. இந்த கிராமத்துலேயும் சாராயம்வியாபாரமாகி பல வருஷமாச்சு.

மொத்தத்துல சட்டத்தால செய்ய முடியாததை முனீசுவரர் தன் பரிபாலனத்தால செய்து கட்டி வெச்சிருக்கார்.

ஒழுங்கா இருந்து பக்தியா இருக்கறவங்களுக்கு பொன் மழை பொழியறார். மாறா நடக்கறவங்க மாண்டு



போறாங்க. அதுவும் சாதாரணமா இல்லை. கண்ட துண்டமாக்கப்பட்டு..

மலையை ஆராய வந்தவங்கள்ள பலர் இறக்கக் காரணம் மலைக்கள்ளர்களோட கூட்டு வெச்சுகிட்டது தான்... ஆனால் உங்களை சாமிவிட்டு வெச்சதுக்குக் காரணம் நிச்சயம் இருக்கு. என்னை விட்டு வெச்சதுக்கும் காரணம் இருக்கு.."

"என்ன அது?"

"தெரியல.. இன்னிக்கு ஒருக்கால் தெரியலாம்."

"எப்படி?"

"இன்னிக்கு அது எனக்கு தரிசனம் தரப்போகுது. அப்ப தெரிஞ்சுடாதா?"

"என்னது.. உனக்கு தரிசனம் தரப்போகுதா?"

"அமா... இது பத்து நாளைக்கு முன்பே எனக்கு சொல்லப்பட்ட தகவல். அதான் பொறுமையா காத்திருக்கேன்."

"அது சரி.. இதெல்லாம் சாமியா.. இல்லை ஆசாமியா?"

"அதான் ராத்திரி பார்க்கப் போறோமே - அப்ப தெரிஞ்சிட்டு போவுது.."

"நிச்சயம் ஆசாமியாதான் இருக்கணும். நம்மை சந்திச்சு நமக்கும் பொன் மழை பெய்யவெச்சு, பூசாரியை கட்டிப்போட்ட மாதிரி கட்டிப் போடலாம். யார் கண்டது?"

"பூசாரி கட்டுப்பட்டு இருக்கறதா நான் நினைக்கல..."

"என்ன சொல்றே?"

இளங்கோவனின் கேள்விக்கு பதில் சொல்லு முன் எட்டி வெளியே ஒரு பார்வை பார்க்கிறாள். பின்னர் உள் ஓடி பூசாரியின் பெட்டி ஒன்றை கள்ளச்சாவி போட்டு மளமளவென்று திறக்கிறாள்.

உள்ளிருந்து ஒரு ஃபோல்டரை எடுக்கிறாள். அதை இளங்கோ எதிரே விரிக்க அவன் விழிகள் அகன்டு பெருகுகின்றன.

அந்த ஃபோல்டரில் பல டாக்குமென்ட்டுகள், சர்டிபிகேட்டுகள். அவை பூசாரியை ஒரு மிலிட்டரி ஆபீசராக சித்தரிக்கின்றன.

"வாட்ட எ சர்ப்ரைஸ், பூசாரி ஒரு மிலிட்டரி ஆபீசரா?"

"ஆமாம்.. மலைப்புதிரைவிட பெரிய புதிர் இது. இப்படிப்பட்டவர் பூசாரியா இங்க இருந்துகிட்டு செயல் பட்றதுல ஏதோ பெரிய காரணம் இருக்கு."

"விந்தியா.. இதென்ன புதிர்மேல புதிரா போய் கிட்டே இருக்கு பரவால்ல, நீகூட பல விஷயங்கள ட்ரேஸ் பண்ணி வெச்சிருக்கியே. நான் உன்னை ரொம்ப அண்டர் எஸ்டிமேட் பண்ணிட்டேன். ஐ ஆம் சாரி.."

- அவன் அவள் கையைத் தேடிப் பிடித்து வருத்தம் தெரிவிக்கிறான். அவள் விலக்காமல் சிரிக்கிறாள். அதே வேகத்தோடு ஃபோல்டரை உள் வைத்து பூட்டவும் செய்கிறாள். ஒன்றுமே தெரியாத மாதிரி வந்து திண்ணைப் புறமாக அமர்ந்து கொள்கிறாள்.

இளங்கோவன் தவிக்கத் தொடங்குகிறான்.



அவன் பார்த்த காட்சிகளும், விந்தியா சொன்ன விஷயங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு முட்டு கின்றன, மோதுகின்றன.

"விந்தியா நெருங்கி வருகிறாள்.

"கவலை வேண்டாம். இன்னிக்கு ராத்திரி நேரடி அனுபவத்துல எல்லாம் சரியாயிடும். அதான் தரிசனம் தரேன்னு சொல்லியிருக்குல்ல.."

"அந்த சந்திப்புல நாம புத்திசாலித்தனமா நடந்துக் கலேன்னா நம்ம தலையும் பறந்துடுமோன்னு பயமா இருக்கு. விவேகமா நடந்துக்கணும் விந்தியா."

"கொஞ்சம் கூட கவலைப்பட வேண்டாம். இந்த நிமிஷம் நான் கேள்விப்பட்டதை எல்லாம் எழுதி வெச் சிருக்கேன். மேல் இடத்துககு பாஸ் பண்ண வேண்டியது தான்.

ஒரு சின்ன தகவல் போதும்; போலீஸ் ப்ட்டாலி யன் மலையை வளைச்சிடும்.

ஆனா விஷயம் அதுல இல்ல இந்த மலைக் காட் டையே ஒரு ஒழுங்குக்கு கொண்டுவந்த அந்த சாமிக்கு, ஒரு மிலிட்டரி ஆபீசரையே தனக்கு பூசாரியா வெச் சிருக்கிற அந்த சாமிக்கு - ஜமீன் ஆசாமிக்கு நா இரண்டு பேரும் உண்மைல யார் - நம்ம மேல கைவெச்ச எதிரொலி எப்படி இருக்குன்னுதானா தெரியாது. ஆனக யால துணிஞ்சு தனியா போவோம். இதுல நிச்சயம் அர்த்தமுள்ள ஏதோ ஒண்ணு இருக்கு."

- விந்தியா கூறுபோட்டு பேசுவதை அவனால் புறந்தள்ள முடியவில்லை. ஒப்புக்கொண்டு பார்க்கிறான். அதைப் பார்த்தும் பார்க்காததுபோல வருகிறார் பூசாரி.

அவர் வரவும் இருவரும் நடிக்க ஆரம்பிக்கின்றனர்.
பூசாரியும் அதில் தன் நடிப்பை கலக்குகிறார்.

# 10

'நான் ஒரு ராஜ்யாதிபதி. என் ராஜ்யத்தில் யாரும்
தப்பு செய்ய முடியாது.. அப்படிப்பட்ட என் ராஜ்
யத்தில் நுழைந்து என்னையே குற்றவாளி என்று
சொன்னான் வல்லபாய் பட்டேல் அனுப்பிய அந்த
பிரதிநிதி. அந்த வடக்கிந்தியனுக்கு ஒரு தமிழ்நாட்டு
கலெக்டரும் உடந்தை.
தப்பும் தவறுமாய் இவர்கள் ஆள நான் ஏன் மண்ணை
இவர்களுக்கு தரவேண்டும். நான் ஆளத்தெரிந்தவன்.
தப்பே இல்லாமல் ஆளத் தெரிந்தவன். எனக்கு
உறுதுணை அந்த முனீசுவரன். என்னை யாரும்
ஒன்றும் செய்ய முடியாது. சாகும்வரை என் பரி
பாலனம் தொடரும்...'

- ஜமீன்தாரின் டயரியிலிருந்து -

நள்ளிரவு நேரம்.

பூசாரி ஆட்டை ஓட்டிக்கொண்டு மலைப்பாதை
மீது ஏற பின் தொடர்கின்றனர் விந்தியாவும் - இளங்கோ
வனும்... இளங்கோ தோட்டாக்கள் நிரம்பிய துப்
பாக்கியை ஒன்றுக்கு இரண்டாக இடுப்பில் செருகிக்
கொண்டிருக்கிறான் விந்தியாவும் எச்சரிக்கைக்கு பஞ்ச
மில்லாதபடிதான் அவனைத் தொடர்கிறான்.

வழக்கம்போல பூசைகள் முடிந்து பூசாரி அங்
கிருந்து சகிண்டி சப்தமும், சங்குச் சப்தமுமாய் சென்று
மறைய கோவில் முன் இப்பொழுது இருவரும்.



"இங்கதானே வரச்சொன்னது சாமி.."

"ஆமாம்.."

"இனிமேதான் வருமோ?"

"பொறுத்து பார்ப்போம்.."

- பேசியபடி புளிய மரத்தை சுற்றி வருகின்றனர்.
ஆடு வெட்டப்பட்டு கிடந்த பலிபீடம் அருகே அவர்கள்
பார்க்க யாருமே வரவில்லை.

ஆனால் வெட்டிப் போடப்பட்ட ஆட்டுப்
பிண்டங்களையும் காணவில்லை.

பகீரென்கிறது.

"எப்படி விந்தியா மாயமாச்சு..?"

"அதானே?"

- இருவரும் வியப்பில் மிரளும்போது குதிரைக்
குளம் படி சப்தம் கேட்கிறது.

"வரான்... வரான்..." - இருவரும் சப்தம் கேட்டு
கூர்மையாகின்றனர். சப்தம் சமீபிக்கத் தொடங்கு
கிறது. அருகில்.. மிக அருகில் என்று கோவில் வாசலில்
முடிகிறது. வந்து நின்றது வெறும்குதிரை மட்டுமே..

அதுவும் வாலைக் குழைத்து பிடறியை உசுப்பி
விட்டுக் கொள்கிறது. விந்தியாவும் இளங்கோவனும்
கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு பார்க்கின்றனர்.

"என்ன விந்தியா குதிரை மட்டும்தான் வந்திருக்கு?"

"அதான் எனக்கும் புரியலை.. பொறுமையா இருப்
போம்.."

- நின்று கைபிசைந்து பேசுகிறாள் அந்த இளம் பெண். சில்லென்ற காற்று வீச்சில் இப்பொழுது அத்தர் வாசம் வீசுகிறது.

"ஏதோ வாசனையடிக்கல.."

"ஆமாம்.."

- சொல்லும்போதே அந்த சமதள கோவில் பரப்பை சுற்றிலும் மெல்லிய வெளிச்சம் பரவுகிறது.

பரவும் வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக கூடிப் பெருகக் காரணம் ஒரு தீப்பந்தம் தாங்கிய மனிதன். அவன் இப்பொழுது கோவில் நிலப்பரப்பை தொட்டு விந்தியா, இளங்கோ இருவரையும் நோக்கி வருகிறான்.

வந்தபின் இருவரையும் பார்த்து வணக்கம் என்கிறான்.

"நீங்க.."

"நான் சாமியோட பிரதிநிதி.."

"சாமியோட பிரதிநிதியா.. சாமி எங்கே?"

"அதோ.."

- அவன் கைகாட்டும் திசைக்கு பார்வை செல்ல, அந்த மலைத்தளத்தின் உச்சமான தட்டையான ஒரு பாறை மேல்குதிரை ஒன்றும் அதன்மேல் வாளோடு சாமியும் தெரிகிறது.

நெஞ்சை என்னவோ செய்கிறது.

வெறித்த விழிகளுக்கு அதிகம் வேலை வைக்காதபடி அந்த குதிரை மனிதன் பாறை விட்டு நீங்கி இருவரையும் நோக்கி வருகிறான்.



இருவரும் கைகோர்த்து சற்று பயத்துடன் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்கிற எச்சரிக்கையுடன் நெருங்கி நிற்கின்றனர்.

குதிரை மனிதன் அவர்களை சமீபிக்கிறான்.

நல்ல வெளிச்சத்தில் இருவரையும் உற்றுப் பார்க்கிறான். அவனுக்கு இருந்தால் வயது எண்பது இருக்கலாம். ஆனால் பார்வையில், லகானை பிடித்திருப்பதில் நிமிர்ந்து அமர்ந்திருப்பதில் இளமையின் நினைவு.

"சாமியை கும்பிட்டுக்குங்க.." - தீப்பந்தம் பிடித்திருப்பவன் அவர்களை பார்த்து சொல்கிறான்.

"இந்த ஆளா சாமி..?"

"தப்பா பேசாதே நாக்கு இருக்காது.."

- புதிதாக ஒருவன் முளைத்து எச்சரிக்கிறான்.

இருவரும் திகைத்து போகின்றனர். இருந்தாலும் இளங்கோவன் சுதாரிக்கிறான்.

"மிரட்டல் வேண்டாம். நாங்க நினைச்சது சரிதான். சாமி பேர்ல நீங்கதான் கூத்தடிக்கிறீங்களா?"

"கூத்தா.. எது? எங்க தர்ம பரிபாலனமா?"

"ஆமா... பெரிய ராஜாங்க நீங்க. பரிபாலனம் பண்ண.."

"சொன்னாலும் சொல்லாட்டியும் இவர் அரச
தான் தனிவில்லிக் கோட்டை ஜமீன்தார் தாணுலிங்
பூபதி இவர். தன்னைத் தானே தற்கொலை செய்துகிட்
இறந்துட்டதா போலீசும் சட்டமும் நம்பற இவர். இறந்
பிழைச்சவர்.

"நம்ப முடியலை இல்ல..?"

"ஆமாம்- இறந்தபின் எப்படி பிழைக்க முடியும்?
இவரென்ன யேசுநாதரா செத்துப் பிழைக்க-"

"யேசுநாதர் செத்து பிழைச்சவராங்கறது எங்க
ளுக்கு தெரியாது ஆனா இவர் சமாதிய பிளந்துகிட்டு
வெளிய வந்ததை நாங்க கண்ணால பார்த்தோம். அந்த
நிமிஷம் இந்த குதிரை இவரை வந்து தாங்கிச்சு.

இந்த கோவில் வாசல்லதான் வந்து நின்னுச்சு.
அதுல இருந்து இவர் எது சொன்னாலும் நடக்குது. எது
சொன்னாலும் பலிக்குது-"

"நல்லா இருக்கு உங்க கதை- போலீசுக்கு பயந்து
பதுங்கி வாழற ஒரு கைதி இவர். தன்னை யாரும் கண்டு
பிடிச்சிடக் கூடாது - தன் தனிமை வாழ்க்கைக்கு குந்தகம்
வந்துடக் கூடாதுன்னு இவர் போட்டுருக்கற வேஷம்
இந்த முனீஸ்வரன் வேஷம். அதுக்கு நீங்களும் ஒத்
துழைக்கறீங்க. ஜமீன்தாரா இருந்ததால பணத்துக்கும்
பஞ்சமில்லை. அதான் பொற்காசா வாரி இறைக்கறார்.
உங்க வாயும் அடைச்சு போச்சு."

-இளங்கோவனின் விளக்கத்தை கேட்டு அந்த
குதிரை மேல் உள்ள மனிதர் சிரிக்கிறார்.

இளங்கோவன் தொடர்கிறான்.

"அதனாலதான் தன் சந்ததிகளை என் மூலமா
வரவழைச்சு, அவங்க கஷ்டப்படக் கூடாதுன்னு பொற்
காசா கொடுத்து அனுப்பியிருக்காரு.

அது மட்டுமில்ல. நல்லா தாக்கு பிடிக்கற நபரா
வேணுமின்னு பூசாரியையும் மிலிட்டரி ஆபிசரா பிடிச்சு
வைச்சிருக்காரு-



இதையெல்லாம் செய்ய நான் தேவைப்பட்டதால
தான் முதல் தடவை இங்க வந்தப்ப என்னைக் கொல்
லலை.

இப்ப தரிசனம் தரக் காரணமும்கூட எப்படியாவது
கன்வின்ஸ் பண்ணிடலாம்கறது உங்க நம்பிக்கை-"

- திரும்பவும் சிரிக்கிறார் அந்த குதிரை மனிதர்.

"போதும் வாயை மூடு. விட்டா பேசிகிட்டே
போறியே. நாங்க முனிசிஷ்யர்கள். இந்த மலைக்
காட்டுல வாழறவங்க. இந்த மலை எங்க தெய்வம். அந்த
தெய்வத்தோட தெய்வம் எங்க முனீஸ்வரன். முனீஸ்வரர்
அருளால கவரப்பட்டு நம்பி நாங்க இங்க வந்துருக்கோம்.

மிலிட்டரியில இருந்து சாதிக்க முடியாததை அந்த
மிலிட்டரி ஆபீசர் பூசாரியா இருந்து சாதிக்கிறார்.
நாங்களும் அப்படித்தான்.

எங்களுக்கு எது எப்ப நடக்கும்கறத சாமி முன்
னையே சொல்லிடும். அது சொன்னா சொன்னது
தான். அது வேற முனி வேற இல்லை. நீ இதை அனுப
விச்சாதான் நம்புவே.

நீ பத்திரிகைக்காரன். நாட்டுக்கு நல்லது சொல்ல
வேண்டியவன். பகுத்தறிவை காட்டி இந்த மலையரசனை
கொச்சைப்படுத்தாதே. இந்த போலீஸ்கார பொண்
ணுக்கும் சொல்லிக்கறோம். உங்களால சாதிக்க முடி
யாததை சாமியை நம்பி நாங்க சாதிச்சுகிட்டு வரோம்.
எல்லாத்தையும் அளந்துட முடியாதுப்பா- அளக்க
முடியாத விஷயங்களும் இந்த உலகத்துல உண்டு. அதுல
ஒண்ணுதான் சாமி-"

அவனின் விளக்கம் இளங்கோவனை விந்தியாவை
நோக்கி பார்க்கச் செய்கிறது. அவளும் அவனை ஒரு
பார்வை பார்த்து, "இதை நம்புவது மடத்தனம் இவர்கள்
பார்வை பார்த்து, "இதை நம்புவது மடத்தனம் இவர்கள்" என்கிறாள்.
பிரெய்ன் வாஷ் செய்கிறார்கள்"

"அப்படியா?"

"நிச்சயமா அப்படித்தான்..."

"அப்ப ஒண்ணு சொல்றோம். அதுலயாவது சாமிய
புரிஞ்சுக்குங்க... சாமி சொல்லுங்க இவங்க இரண்டு
பேருக்கும் நாளைக்கு..."

அவன் எதையோ சொல்ல முன்வர அந்த குதிரை
மனிதன் கையை உயர்த்தி தடுக்கிறார்.

"தம்பி, நீ உன் விருப்பப்படி போய் என்ன எழுத
நினைக்கறியோ எழுது... அம்மா நீயும் உன் போலீஸ்
படையோட வந்து உன் கடமையை எப்படி செய்ய
ணுமோ அப்படி செய். நீங்க போகலாம்..."

சொன்ன மறுவினாடி அந்த குதிரை மனிதர்
திரும்பி பயணிக்கிறார்.

அவர்களும் வந்த சுவடு தெரியாமல் கலை
கின்றனர். மீண்டும் இருட்டு... சில்வண்டு சப்தம்.
முனீசுவரன் சன்னதியில் மெல்லிய விளக்கு வெளிச்சம்.
விந்தியாவும் இளங்கோவனும் ஒருவரை ஒருவர் நெடு
நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஒரு தீர்
மானத்துடன் நடக்கின்றனர்.

# 11

'என்னை ஒரு ஒளி அழைத்துக் கொண்டே
யிருக்கிறது. அதை என்னால் இன்னதென்று வரு
ணிக்க முடியவில்லை. நான் அதனுள்ளும் - அது
என்னுள்ளும் அடிக்கடி கலக்கிறோம். நான் லேசா
கிறேன். நான் அப்பொழுதெல்லாம் ரௌத்ர வடிவம்
கொள்கிறேன். ஒரு குதிரை வருகிறது. அதில் நான்
பயணிக்கிறேன்.

என் நாவில் ஒலிப்பதெல்லாமும் அப்பொழுது
சத்யமாகிறது. எது அது?

- ஜமீன்தாரின் டயரிக் குறிப்பிலிருந்து

பொன் விளைந்த பட்டியை விட்டு புறப்படுகிறது
அந்த பஸ்.

பஸ்ஸில் விந்தியாவும், இளங்கோவனும் ஒரு தீர்
மானத்துடன் தென்படுகின்றனர்.

"நான் போய் பத்திரிகைல பிட்டுபிட்டு வைக்கப்
போறேன்... நீ?"

"நான் போய் எங்க பட்டாளத்தோட வந்து
வளைக்கப் போறேன். இந்த ஊர் இன்ஸ்பெக்டரை
நம்பறதுல பிரயோஜனமில்லை. அவர் சாமியை ஒண்
ணும் சொல்லாதேன்னு அவர் புகழ் பாட்றவரா இருக்
காரு... எஸ். பி. லெவல்ல மூவ் பண்ணணும்."

"ஆமாம், கட்டாயம் இதை செய்யணும். என்ன
தைரியம் இருந்தா அந்த குதிரைக்காரன் நம்மை
துணிஞ்சு அனுப்புவான். எவ்வளவு நெஞ்சழுத்தம் அவ
னுக்கு? செத்துப் பொழச்சவனாம்: முனீஸ்வரனாம். தர்ம

பரிபாலனம் பண்றவனாம். எல்லாம் கதை. சரியான கதை. காதுல பூ சுத்தற கதை. திருட்டுப் பசங்களுக்கு ஒளிஞ்சுக்க கிடைக்கற ஆயுதம் தானே சாமி..."

"நிச்சயமா... இவங்கள மாதிரி ஆட்கள விட்டு வைக்கக்கூடாது. நம்ம சக்தி என்னன்னு காட்டணும்."

விந்தியா சொல்லி முடிக்கவில்லை. அந்த பேருந்து மீது ஒரு லாரி அசுர வேகத்தில் மோதுகிறது. அடுத்து என்ன நடந்ததென்றே அவர்களுக்கு தெரியாது!

மறுநாள் பேப்பரில் லாரி பேருந்து மோதல். பதினைந்து பேருக்கு மேல் சாவு என்று போட்டிருக்கிறது. எதிர்பாராத விபத்து. லாரிக்கு பிரேக் பிடிக்கவில்லையாம்.

இறந்தவர்கள் பட்டியலில் விந்தியா பெயரும், இளங்கோவன் பெயரும் இருக்கிறது.

இது தெரிந்துதான் அந்த குதிரை மனிதர் போக விட்டாரோ?

இல்லை விபத்தே திட்டமிட்ட சதியா?

எது நிஜம்?

●●●